

பாரதம்
காப்போம்!
HO
PE
வெளியீடு
SAVE INDIA!

# இவ்வரிய செல்வத்தை இழக்க முடியுமா?

பாருக்குள்ளே நல்ல நாடு - எங்கள்
பாரத நாடு

ஞானத்திலே பர மோனத்திலே - உயர்
மானத்திலே அன்னதானத்திலே
கானத்திலே அமுதாக நிறைந்த
கவிதையிலே உயர் நாடு - இந்தப் (பாருக்குள்ளே)

தீரத்திலே படை வீரத்திலே - நெஞ்சில்
ஈரத்திலே உபகாரத்திலே
சாரத்திலே மிகு சாத்திரங் கண்டு
தருவதிலே உயர் நாடு - இந்தப் (பாருக்குள்ளே)

நன்மையிலே உடல் வன்மையிலே - செல்வப்
பன்மையிலே மறத் தன்மையிலே
பொன்மயிலொத்திடும் மாதர் தம் கற்பின்
புகழினிலே உயர் நாடு - இந்தப் (பாருக்குள்ளே)

யாகத்திலே தவ வேகத்திலே - தனி
யோகத்திலே பல போகத்திலே
ஆகத்திலே தெய்வ பக்தி கொண்டார் தம்
அருளினிலே உயர் நாடு - இந்தப் (பாருக்குள்ளே)

பாருக்குள்ளே நல்ல நாடு - இந்தப்
பாருக்குள்ளே நல்ல நாடு - எங்கள்
பாரத நாடு

**-பாரதியார்-**


**HOUSE OF PEACE**

**#8, 4th main, 2nd cros, LB Shastri nagar,**
**Bangalore 17  Ph. 09886001357**

# ஏன் ஏமாற்றப் படுகிறோம்?

இன்று ஜனநாயகம் என்ற பெயரில் நம் மனதுக்கு விருப்பமானவர்களை ஆட்சித்தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கிறோம். சுயநலம் அற்றவர்கள், நாட்டுக்காக அனைத்தையும் தியாகம் செய்பவர்கள், பொறுப்புணர்வு மிக்க தொண்டர்கள் என்றெல்லாம் அவர்கள் கூறும் வாய்வார்த்தைகளை நம்பி அவர்களுக்கு வாக்களிக்கிறோம். ஆனால் இவ்வாறு ஆட்சிப் பொறுப்பை ஏற்றவர்கள் நமக்களித்த வாக்குறுதிகளை மீறுவதோடு மட்டுமல்லாமல் தாங்கள் ஏற்றெடுத்த பொறுப்பை நிறைவேற்றாததோடு நமக்குப் பலவிதத்திலும் மோசடி செய்கிறார்கள். அவர்களின் முழு நோக்கமும் பணமும் பதவியும்தான் என்பதைத் தவிர வேறு எதுவும் இல்லை என்பதை அவர்கள் நிரூபிக்கிறார்கள். தங்களின் மற்றும் தங்கள் வாரிசுகளின் பொருளாதார மேம்பாடு மற்றும் புகழ் என்பவை மட்டுமே இவர்களின் குறிக்கோளாக இருந்து வருகிறது

இது நமது கண்முன்னே காலாகாலமாக நடைபெற்று வரும் நாடகம். எந்த ஒரு கட்சி ஆட்சிக்கு வந்தாலும் இந்த நடைமுறையில் மாறுதல் இல்லை என்பதை நாம் பல காலமாகக் கண்டு வருகிறோம். ஆட்சிக் கட்டிலை அடைவதற்காக எல்லா குறுக்கு வழிகளையும் அக்கிரமங்களையும் எவ்வித தயக்கமும் இன்றி கைகொள்கின்றனர். மதம், இனம் ஜாதி, மொழி, இடம் இவற்றின் அடிப்படையில் கட்சிகள் அமைத்துக் கொண்டும் மக்களின் இன உணர்வுகளையும் மத உணர்வுகளையும் தூண்டி கலவரங்களும் கலகங்களும் உண்டாக்கி அவற்றால் தங்கள் வாக்கு வங்கிகளை வலுப்படுத்திக் கொள்கிறார்கள். சட்டம் ஒழுங்கு நீதி இவற்றை கட்டிக்காக்க வேண்டிய இவர்கள் தங்கள் சுயநல நோக்கங்களுக்காக இவற்றை அப்பட்டமாக மீறுகிறார்கள். இவற்றை வைத்துக்கொண்டே அப்பாவி குடிமக்கள் மீது அடக்குமுறைகளை கட்டவிழ்த்து விடுகிறார்கள். இவர்கள் ஆட்சிப்பீடத்தில் அமர்ந்திருந்தாலும் இல்லாவிட்டாலும் இவர்களின் போக்கு இதுதான். நாட்டு மக்கள் இவர்களின் அராஜகங்களுக்கு பயந்தே வாழவேண்டிய சூழ்நிலையில் உள்ளார்கள். வேறு வழிகள் ஏதும் இல்லாத காரணத்தால் இக்கொடுமைகளை நாம் சகித்தே வாழவேண்டிய கட்டாயத்தில் உள்ளோம்.

ஒரு கொடுங்கோலனிடம் இருந்து விடுதலை பெற இன்னொரு கொடுங்கோலனிடம் அபயம் தேடும் அவலம்! ஆளுவதற்கு அறவே தகுதி இல்லாத திரைப்படக் கலைஞர்களிடமும் கொள்ளைக்காரர்களிடமும் கொலைகாரர்களிடமும் நாடு மாறி மாறி ஒப்படைக்கப் படும் அவலம்! மக்களின் உழைப்பின் கனிகளை எல்லாம் வரிகளாகக் கறந்து அவற்றை வைத்துக் கொண்டே அவர்களை அடக்கியாளும் கொடுமை!

செழிப்பான நாட்டு வளங்களும் மனித வளங்களும் அறிவு வளமும் பாரெங்கும் காணாத அளவு நம் நாட்டில் இருந்த போதும் இவை அனைத்தும் இன்று நடக்கும் அரசியல் சூதாட்டத்துக்கு பலியாகும் நிலை. தொடர்ந்து மக்கள் வறுமையிலும் அச்சத்திலும் நீடிக்கும் நிலை. கொலை கொள்ளை விபச்சாரம் சூதாட்டம் மது

போதைப்பொருள் போன்ற தீமைகளின் ஆதிக்கத்தில் இருந்து விடுதலை என்ற பேச்சுக்கே இடமில்லை என்பது மட்டுமல்ல, இவற்றை சட்டபூர்வமாக்கி இவற்றைக் கொண்டே நாட்டின் வருவாயையும் ஆளுபவர்களின் வருவாயையும் பெருக்கிக்கொள்ளும் அவலம். அவலங்களின் பட்டியல் இன்னும் நீளும் என்பது யாரும் அறிந்த உண்மை!

ஏன் இந்த அவலங்கள்? ஏன் இவ்வாறு தொடர்ந்து ஏமாற்றப் படுகிறோம்?

# அடிப்படைக் குறைபாடுகள்

இந்த அவலங்களை நாடு தொடர்ந்து அனுபவிப்பதற்குக் அடிப்படையாக திகழும் குறைபாடுகள் சிலவற்றை முதலில் காண்போம்...

**அ) தனிநபர் ஒழுக்க சீர்கேடு**

நாட்டில் குற்றங்களும் பாவசெயல்களும் மோசடிகளும் நாளுக்கு நாள் பெருகுவதற்கு ஒரு முக்கிய காரணம் மக்களிடையே பாவங்களைப் பற்றிய குற்ற உணர்வும் வெட்க உணர்வும் இல்லாமையாகும். தனி நபர் வாழ்விலும் குடும்ப வாழ்விலும் சமூக வாழ்விலும் தன் செயல்பாடுகளுக்காக தன்னைத் தட்டிக்கேட்க யாரும் இல்லை என்ற உணர்வு நாளுக்கு நாள் பெருகி வருவதை நாம் காணலாம். நாடே குற்றம் செய்யும்போது நாம் மட்டும் ஏன் செய்யக்கூடாது என்ற உணர்வும் சிறிய குற்றம் செய்பவன் பெரிய குற்றம் செய்பவனைக் காரணம் காட்டி தன் செயலை நியாயப்படுத்திக் கொள்ளும் போக்கும் குற்றங்கள் பற்றிய பொறுப்புணர்வையும் வெட்க உணர்வையும் சமூகத்தில் இல்லாமல் ஆக்கி விடுகின்றன..

**ஆ) சரியும் தவறும் வரையறுக்கப்படாமை**

மக்களின் செயல்பாடுகளில் சரி எவை தவறு எவை நல்லவை எவை தீயவை எவை என்றோ நாட்டில் நியாயம் எது அநீதி எது என்பதையோ தீர்மானிக்க தெளிவான உறுதியான எந்த அளவுகோலும் இல்லாதது நாட்டில் சட்டம் ஒழுங்கு பேணப்படாமல் இருப்பதற்கு முக்கிய காரணமாகும். சட்டத்தை எப்படியும் வளைக்கலாம் என்ற நிலையும் என்பது ஆளுக்கு ஒரு நீதி, நாளுக்கு ஒரு நீதி என்று சட்டம் கேலிக்குள்ளாக்கப்படுவது இதன் காரணத்தினால்தான்!

**இ) மிக பலவீனமான தொலைநோக்கு இல்லாத சட்டங்கள்**

பலவீனமானவையும் சிறிதும் தொலை நோக்கில்லாதவையும் ஆன சட்டங்கள் நடைமுறையில் இருப்பதன் காரணமாக விபச்சாரம், மது, சூதாட்டம், ஓரினச்சேர்க்கை போன்ற சமூகத்திற்கு தீங்கு விளைவிக்கும் கொடிய குற்றங்கள் கூட சட்ட அங்கீகாரத்தோடு நடைபெறவும் நாளுக்கு நாள் பெருகவும் செய்கின்றன. இவற்றைத் தொடர்ந்து திருட்டும் கொள்ளையும் கற்பழிப்புகளும் கூட எதிர்காலத்தில் சட்ட அங்கீகாரம் பெறக்கூடிய அபாயமும் நாட்டில் உள்ளது.

**ஈ) தவறான ஆன்மீகம்**

பொதுவாக ஆன்மிகம் என்பது மனிதனை பண்புள்ளவனாக ஆக்கக் கூடியது. ஆனால் கடவுளைத் தவறாக சித்தரிப்பதன் காரணமாக மக்கள் உள்ளங்களில் இருந்து கடவுள் நம்பிக்கையும் இறையச்சமும் விலகிப் போகின்றன. உதாரணமாக

சர்வ வல்லமையும் நுண்ணறிவும் கொண்ட கடவுளுக்கு பதிலாக உயிரும் உணர்வும் இல்லாத பொருட்களையும் இறந்துபோனவர்களின் சமாதிகளையும் காட்டி அவற்றையெல்லாம் கடவுள்கள் என்று கற்பித்தால் அங்கு மக்களிடம் இறையச்சம் என்பது விலகி பாவங்கள் செய்யும் போது உண்டாகும் குற்ற உணர்வு உண்டாகாமல் போகிறது. எந்த ஒரு பாவத்தையும் தயக்கமின்றி செய்யும் துணிச்சல் வந்துவிடுகிறது.

**உ ) கற்பனைப் பாத்திரங்களின் ஆதிக்கம்**

நாட்டின் சுமார் நாற்பது சதவீத மக்கள் வறுமைக் கோட்டின் கீழே வாழ்ந்துவரும் நிலையில் நாட்டுக்கு அறவே பயனில்லாத பல கற்பனைப் பாத்திரங்களுக்காக நாட்டின் செல்வங்கள் கொள்ளை போகின்றன. தலைவர்களின் சிலைகளுக்கும் மொழித்தாய்களுக்கும் நினைவிடங்களுக்கும் இவற்றைத் தொடரும் மூடநம்பிக்கைகளுக்கும் வீண்சடங்குகளுக்கும் பெருவாரியான செல்வம் அரசால் செலவிடப்படுகிறது. இவற்றின் பெயரால் மூளும் கலவரங்களும் உயிர் மற்றும் உடமை சேதங்களும் பாமரர்களை தொடர்ந்து வறுமையிலும் வாட்டத்திலும் நீடிக்க வைக்கின்றன.

**ஊ ) தகுதியற்றவர்களிடம் ஆட்சிப் பொறுப்பு**

நாட்டின் உற்பத்திக்கோ மேம்பாட்டுக்கோ எந்தவித பங்களிப்பும் செய்யாததும் நாட்டு மக்களை சோம்பேறிகளாக்கவும் செய்கின்ற திரைப்படம் மற்றும் கிரிக்கெட் போன்ற கேளிக்கைகளுக்கு ஊடகங்களும் அரசும் வீண் முக்கியத்துவம் கொடுத்து ஊக்குவிப்பதால் நாட்டு மக்கள் இதன் பெயரால் வெகுவாக கொள்ளை அடிக்கப் படுகிறார்கள். இவர்கள் நாட்டு மக்களின் உழைப்பின் கனிகளை சுரண்டி வாழ்கிறார்கள். அவர்களின் நேரங்களை பாழ்படுத்துகிறார்கள். ஆனால் மக்களின் அறியாமையால் நாட்டை ஆள்வதற்கு அறவே தகுதி இல்லாத நடிக நடிகையர்களின் காலடிகளில் நாட்டின் ஆட்சிபீடமும் ஒப்படைக்கப் படுகிறது.

**எ ) ஆன்மீகத்தின் பெயரால் கொள்ளை**

இறைவழிபாடு என்ற பெயரில் எல்லா மதங்களையும் சார்ந்த இடைத்தரகர்கள் நாட்டு மக்களிடையே மூடநம்பிக்கைகள் பலவற்றைப் பரப்பி இவற்றின் பெயரால் நாட்டின் செல்வங்களை கொள்ளையடிக்கிறார்கள். இதன்மூலம் பொருட்செலவு இல்லாத எளிமையான வழிபாடு வியாபாரமாக்கப்படுகிறது. நாட்டுமக்களின் சேமிப்பும் உழைப்பும் இவர்களால் கறக்கப்பட்டு இவர்கள் நடத்தும் நிறுவனங்களிலும் ஆசிரமங்களிலும் பதுக்கப்படுகிறது.

**ஏ ) கடவுளின் பெயரால் மனிதகுலத்தில் பிரிவினைகள்**

மதங்களின் பெயரால் திணிக்கப்படும் மூடநம்பிக்கைகளின் விளைவாக மனித இனம் கூறுபோடப்பட்டு மனித சகோதரத்துவமும் சமத்துவமும் மறுக்கப்படுகிறது. அதனால் மனிதகுலத்தில் தீண்டாமையும் வெறுப்பும் விதைக்கப்படுகிறது. இவற்றைக் கொண்டு சுயநலமிகள் அரசியல் ஆதாயங்கள் தேடுவதால் இனக் கலவரங்களும் மதக்கலவரங்களும் கற்பழிப்புகளும் படுகொலைகளும் தொடர்கதைகளாகின்றன.

**ஐ ) முறையற்ற பொருளாதாரக் கொள்கை:**

முறையற்ற வரிவிதிப்பு, வட்டி சார்ந்த வங்கி முறை, சுரண்டல்காரர்களின் அரசியல் ஆதிக்கம், அரசியல்வாதிகளின் குறுக்கீடு போன்றவற்றின் காரணமாக நாட்டின் தொழில் வளர்ச்சியும் வணிகமுறைகளும் விபரீதமான முறையில் பாதிக்கப்படுகின்றன. அதனால் கறுப்புப்பணம், பதுக்கல், வரி ஏய்ப்பு, இலஞ்ச ஊழல்கள் போன்றவை மலிந்து நாட்டை குட்டிச்சுவராக்குகின்றன.

**ஒ) குறைபாடுகள் மலிந்த கல்வித் திட்டம்**

கல்வியின் முதல் நோக்கம் மனிதனை பண்புள்ளவனாக ஆக்குவதே. அதற்கான எந்த பாடத்திட்டங்களும் நமது கல்வி முறையில் இல்லை. பொருள் சம்பாதிப்பது ஒன்று மட்டுமே குறிக்கோளாக கொண்டு கல்வி கற்பிக்கப்படுவதால் தங்களுக்காக உழைத்த பெற்றோர்களைப் புறக்கணிக்கவும் முதியோர் இல்லங்களில் சேர்க்கவும் செய்கிறார்கள் அவர்களின் மக்கள். மேலும் வாழ்க்கையில் எந்தவகையிலும் பயன்படாத பலவற்றையும் பாடத்திட்டத்தில் உட்படுத்தி மாணவர்களின் நேரங்கள் கணிசமான அளவில் வீணடிக்கப்படுகிறது.

**ஓ) ஊடக வஞ்சனை**

இன்று ஊடகங்களின் மூலம் வதந்திகள் மற்றும் பொய்யான செய்திகளை பரவவிட்டு பொதுமக்களை ஏமாற்றி அதன்மூலம் பகல் கொள்ளைகளையும் இனக்கலவரங்களையும் சுயநல சக்திகள் நிகழ்த்துகின்றன. இதனால் நாடு சந்திக்கும் பொருட்சேதங்களும் உயிர் சேதங்களும் அளவிட முடியாதவை. ஆதாரம் ஏதுமின்றி இவ்வாறு பரப்பப்படும் தகவல்கள் திட்டமிட்டு பரப்பபடுபவையே என்று பின்னர் நிரூபணம் ஆனாலும் இந்த வஞ்சகர்களையும் ஊடகங்களையும் தண்டிக்க எந்த முகாந்திரமும் இல்லாததால் தொடர்ந்து நாடு இக்கொடுமைக்கு பலியாகிறது.

பட்டியலிட இன்னும் பல குறைபாடுகள் இருந்தாலும் விரிவஞ்சி இத்துடன் நிறுத்திக் கொள்வோம்.

இந்த தொடரும் குறைபாடுகளை நிவர்த்தி செய்து நாட்டைக் காப்பாற்ற வழியேதும் உண்டா? விழி பிதுங்கி நிற்கும் நம் நாட்டுக்கு இனியோர் விடுதலை என்று பிறக்கும்? ....ஏங்காத உள்ளங்கள் கிடையாது என்பதை அறிவோம்.

# பாரதத்தைக் காப்போம்

'பாருக்குள்ளே நல்ல நாடு பாரத நாடு' என்பது கவிதை வரிகளானாலும் அது உண்மையே என்பதை நாம் ஒவ்வொருவரும் உணர்ந்தே இருக்கிறோம். பல்வேறு மதங்களும், மொழிகளும், இனங்களும் கலந்துறவாடும் இந்நாடு அவ்வப்போது சுயநல அரசியல் சக்திகளால் கலவர பூமியாக்கப் பட்டாலும் காலப்போக்கில் அனைத்தையும் மறந்து நாம் மனிதர்கள் என்ற அடிப்படையில் இணைந்து வாழும் விந்தையை பாரில் எங்குமே காண முடியாது. கருத்து வேறுபாடுகளும் மொழிகளும், நிறங்களும் நம்மைப் பிரித்தாலும் நாட்டின் நலன் என்பது நாம் அனைவரும் நாடும் ஒன்று.

இறைவன் நமக்கு வழங்கியுள்ள அருட்கொடைகளான மழை, காற்று, விளைச்சல்கள் போன்றவற்றை அனுபவிக்கும்போது நமது பேதங்கள் குறுக்கே நிற்பதில்லை. அதே போல இயற்க்கை சீற்றங்களும், ஆபத்துக்களும் நம்மைத் தாக்கும்போது நமது பேதங்கள் மறந்தே அவற்றை எதிர்கொள்ளவும் அவற்றில் இருந்து தற்காத்துக் கொள்ளவும் செய்கிறோம். அவ்வாறே இன்று நாட்டைத் தாக்கி நிற்கும் அரசியல் சூதாட்டத்தையும் எதிர்கொள்ளவேண்டிய முறையில் எதிர்கொண்டு ஆவன செய்யாவிட்டால் நாம் அனைவருமே அழிவுக்கு உள்ளாவோம் என்பது உறுதி. அந்த வகையில் நம் நாட்டை பீடித்துள்ள இந்த நோயில் இருந்து காப்பாற்ற எங்களுக்குத் தெரிந்த வழிமுறைகளை இங்கு சகோதர வாஞ்சையோடு உங்களோடு பகிர்ந்து கொள்ள நாடுகிறோம்.

# சீர்திருத்தத்தின் அடிப்படை

பகிர்ந்து கொள்ளும் முன்னால் நாம் முன்வைக்கும் சீர்திருத்த திட்டத்தின் அடிப்படை என்ன என்பதை முதலில் விளக்குவோம்.

நாம் அன்றாட வாழ்வில் மிக்ஸி, துணி துவைக்கும் இயந்திரம், ஸ்கூட்டர் போன்ற பல கருவிகளையும் உபகரணங்களையும் வாகனங்களையும் பயன்படுத்துகிறோம். இவற்றை பக்குவமாக பழுதில்லாமல் நீண்ட காலம் பயன்படுத்த வேண்டுமானால் அவற்றை உண்டாக்கியவர்கள் நமக்கு வழங்கும் கையேட்டில் கூறியுள்ளபடியே பயன்படுத்த வேண்டும் என்பதையும் நன்றாக அறிவோம். பொருளை தயாரித்தவர்களுக்கே அவற்றின் நுணுக்கங்கள் நன்றாக தெரியும் என்பதாலேயே நாம் அவ்வாறு செய்கிறோம் அல்லவா? ஆனால் மிக்சி, ஸ்கூட்டர் இவற்றை விட பல்லாயிரம் மடங்கு நுணுக்கங்களை (***complications)*** சுமந்து நடப்பவர்கள் நாம்! அவற்றை நாம் செய்யவும் இல்லை. உள்ளிருந்து கொண்டு இயக்குவதும் நாமல்ல! அப்படியிருக்க நம்மைப் படைத்தவனும் நம்மை பரிபாலித்து வருபவனும் ஆன இறைவன் இவற்றை எப்படி பயன்படுத்தவேண்டும் என்று கூறியிருக்க அப்படி பயன்படுத்துவதுதானே முறை?

நாம் இவ்வுலகில் அமைதியாக வாழ நம்மைப் படைத்தவன் வழங்கிய வாழ்க்கைத் திட்டம்தான் இஸ்லாம் என்று அரபு மொழியில் அறியப்படுகிறது. இவ்வார்த்தைக்கு அமைதி என்றும் கீழ்படிதல் என்றும் இரண்டு பொருள்கள் உண்டு. இறைவனின் கட்டளைகளுக்கு கீழ்படிந்து வாழ்ந்தால் இவ்வுலகிலும் அமைதியைக் காண முடியும். மறுமையிலும் அமைதியை -மோட்சத்தை- அடைய முடியும் என்பது இஸ்லாம் முன்வைக்கும் தத்துவமாகும்.

இந்த சீரிய வாழ்க்கைத் திட்டம் தனிநபர் வாழ்விலும் குடும்ப வாழ்விலும் சமூக வாழ்விலும் ஏற்படுத்தும் சீர்திருத்தங்களை இதைப் பின்பற்றுவோர் நன்றாக அறியவும் அனுபவிக்கவும் செய்கிறார்கள். இது இவ்வுலகைப் படைத்து பரிபாலிப்பவனான நம் இறைவன் தரும் வாழ்க்கைத் திட்டம் என்பதால் இதில் மனிதன் சந்திக்கக்கூடிய அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வுகளை நம்மால் காணமுடிகிறது.

வாருங்கள்..... நாம் மேலே பட்டியல் இட்டுள்ள குறைபாடுகளை இஸ்லாம் எவ்வாறு நீக்குகிறது என்பதைக் காண்போம்:

மேலே பட்டியலில் இடம்பெற்றுள்ளவையும் இன்னும் இடம்பெறாதவையும் ஆன அனைத்து குறைபாடுகளையும் நிவர்த்தி செய்ய முதன்மையாக இஸ்லாம் தனிமனித நல்லொழுக்கத்தை அடிப்படையாக்குகிறது. அதாவது 'முதலில் உங்களை நீங்கள் சீர்திருத்திக் கொள்ளுங்கள். நாடு தானே சீர்திருந்தும்!' என்பது இஸ்லாம் மனிதகுலத்துக்கு கற்பிக்கும் முதல் பாடமாகும். இறைதூதர்களை அவ்வப்போது இறைவன் அனுப்பி வந்ததன் நோக்கமும் இதுவேயாகும். தர்மத்தை பூமியில் நிலைநாட்ட வந்த அனைத்து இறைதூதர்களும் கடைப்பிடித்த வழிமுறை இதுவேயாகும். அந்த தூதர்கள் வரிசையில் இந்த பூமிக்கு இறுதியாக வந்த முஹம்மது நபி(ஸல்) அவர்கள் தனது வாழ்நாளில் இவ்வாறுதான் கொடூரர்களாக வாழ்ந்துகொண்டு இருந்த அரபு நாட்டு மக்களை பண்படுத்தி ஒழுக்க சீலர்களாக ஆக்கியதோடு மட்டுமல்லாமல் அந்த நாட்டில் வறுமை முற்றிலும் ஒழிந்த ஒரு வளமான பேரரசையும் நிறுவிக் காட்டினார்கள். அதோடு நில்லாமல் இறைவனுக்கு பதில் சொல்லியாக வேண்டும் என்ற பொறுப்புணர்வு மிக்க ஜனாதிபதிகள் பிற்காலத்தில் உருவாக வழிவகை செய்தார்கள்.

வாருங்கள், நபிகள் நாயகம் எவ்வாறு நீதி மிக்க ஆட்சிக்கு வித்திட்டார் என்பதை அவரது சுருக்கமான வாழ்க்கை வரலாற்றில் இருந்து அறிவோம்....

## நபிகள் நாயகம் அவர்களின் சுருக்கமான வரலாறு

சவுதி அராபியாவில் மக்கா நகரில் பிறந்து வளர்ந்த முஹம்மது நபி (ஸல்) அவர்கள் தமது நாற்பது வயது வரை சாதாரண மனிதராகவும், ஒரு வியாபாரியாகவும் தான் இருந்தார்கள். ஆனால் தாம் வாழ்ந்த மக்களிடையே உண்மைக்கும் நேர்மைக்கும் நாணயத்திற்கும் பெயர் பெற்றவர்களாக இருந்தார்கள். மக்கள் அவரை 'அல் அமீன்' (நம்பிக்கைக்கு உரியவர்)) என்ற பட்டப்பெயர் கொண்டு மதிப்போடு அழைத்தார்கள்.

ஆனால் அவரைச் சுற்றி வாழ்ந்த மக்கள் பலவிதமான மூடநம்பிக்கைகளிலும் மூடப்பழக்கவழக்கங்களிலும் மூழ்கிக்கிடந்தார்கள். மக்காவில் இன்று காணப்படும் சதுர வடிவான கஅபா என்ற இறையில்லம் சுமார் 5000 வருடங்களுக்கு முன்னால் இப்ராஹீம் (ஆப்ரஹாம்) என்ற இறைத் தூதரால் ஏக இறைவனை வழிபடுவதற்காக கட்டப்பட்ட ஒன்றாகும். ஆனால் காலப்போக்கில் அதற்குள் 360 சிலைகள் நிறுவப்பட்டு தினம் ஒரு சிலைக்கு வழிபாடு என்றவாறு நடத்திக் கொண்டிருந்தார்கள். அதிகாரம் படைத்தவர்களும் பலம் வாய்ந்தவர்களும் இடைத்தரகர்களும் சேர்ந்து கடவுளின் பெயரால் மக்களை அடிமைப் படுத்தியும் கொடுமைப் படுத்தியும் வந்தனர். குலவேற்றுமையும் இனவேற்றுமையும் ஆழமாய் வேரூன்றியிருந்த காரணத்தால் அவர்களுக்குள்ளே சண்டைகளுக்கும் கலகங்களுக்கும் பஞ்சமில்லாமல் இருந்தது. பெண்ணடிமைத்தனமும் மூடநம்பிக்கைகளும் காரணமாக அவர்கள் பெண்குழந்தைகள் பிறந்தாலே இழிவு

என்று கருதி அவர்களை உயிரோடு புதைக்கவும் செய்து வந்தார்கள். இன்னும் இவைபோன்ற பல அனாச்சாரங்களும் தலைவிரித்தாடிக் கொண்டிருந்தன.

தன்னைச் சுற்றி இவையெல்லாம் நடந்துகொண்டிருக்க இவற்றுக்கான தீர்வுகளுக்காக அவரது மனம் ஏங்கிக் கொண்டிருந்த வேளையில்தான் முஹம்மது (ஸல்) அவர்கள் இறைவனின் தூதராகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இறைவன் புறத்திலிருந்து தான் பெறும் செய்திகளையும் எச்சரிக்கைகளையும் மக்களுக்கு எடுத்துச் சொன்னார்கள்.

- இந்த உலகம் இறைவனால் படைக்கப் பட்டது. இங்கு வாழும் மனிதர்கள் யாவரும் இறைவனுக்கு கீழ்படிந்து வாழக் கடமைப் பட்டுள்ளார்கள் . அவ்வாறு வாழ்ந்தால் மட்டுமே இவ்வுலகில் நீதியும் அமைதியும் ஏற்படும். மறுமையிலும் நீங்கள் மோட்சத்தை அடைய முடியும்.
- ஒருநாள் இவ்வுலகம் முற்றாக அழிக்கப்படும். மீண்டும் இறைவனிடமிருந்து கட்டளை பிறப்பிக்கப் படும்போது இவ்வுலகின் மீது வாழ்ந்து மறைந்த அனைத்து மனிதர்களும் மீண்டும் உயிர்கொடுத்து எழுப்பப்படுவர். அன்று ஒவ்வொரு மனிதர்களும் இப்பூமியின் மேல் செய்த ஒவ்வொரு பாவமும் புண்ணியமும் எடுத்துக்காட்டப்பட்டு. விசாரிக்கப் படுவார்கள். விசாரணைக்குப் பிறகு புண்ணியவான்களுக்கு சொர்க்கமும் பாவிகளுக்கு நரகமும் விதிக்கப் படும். எனவே இறைவனின் கட்டளைகளை ஏற்று அவன் ஏவியவற்றைச் செய்யுங்கள். தடுத்தவற்றில் இருந்து விலகிக் கொள்ளுங்கள்.
- இறைவனின் கட்டளைகளில் முக்கியமானது அந்த ஏக இறைவன் மட்டுமே வணங்குவதற்குத் தகுதியானவன் என்று ஏற்றுக் கொள்வதாகும். அவனை இடைத்தரகர்கள் இன்றி நேரடியாக வணங்க வேண்டும். அவன் அல்லாத எதையுமே கடவுள் என்று சொல்வதோ வணங்குவதோ அறவே கூடாது. அவனுக்கு பதிலாக சிலைகளையோ உருவங்களையோ வணங்குதல் பெரும் பாவமாகும்.
- மனிதர்கள் அனைவரும் சீப்பின் பற்களைப் போல் சமமானவர்களே. இனத்தாலோ, குலத்தாலோ, நிறத்தாலோ, மொழியாலோ யாரும் யாரையும் விட உயர்ந்தவர்கள் அல்ல.
- மேலும் கொலை, கொள்ளை, வட்டி, சூதாட்டம், விபச்சாரம், போதைப் பொருட்கள், பொய், பித்தலாட்டம், மோசடி, ஏமாற்றுதல், போன்ற எல்லாத் தீமைகளிலிருந்தும் மனிதர்கள் விலகி இருக்க வேண்டும்''

கஃபா என்னும் ஆலயத்திலும், அதைச் சுற்றிலும் சிலைகளை நிறுவி அவற்றின் வழிபாட்டில் ஆழமாக மூழ்கிக்கிடந்த சமுதாயத்தில் ''ஒரே ஒரு கடவுளை மட்டும் தான் வணங்க வேண்டும் மற்றவை கடவுள் அல்ல'' என்று கூறினால் என்ன விளைவுகள் ஏற்படும் என்பதை யாரும் அனுமானிக்க முடியும்.

ஆம், நபிகள் நாயகம் இந்த ஏக இறைக்கொள்கையைச் சொல்லச் சொல்ல மக்கள் மத்தியில் புரட்சி புயலென எழுந்தது. ஆரம்பத்தில் ஒருசில பலவீனமானவர்களும் ஒடுக்கப்பட்டவர்களும்தான் இக்கொள்கையை ஏற்றுக் கொண்டார்கள். நாளடைவில் மற்றவர்களையும் கவர ஆரம்பித்தது. ஆனால் மூதாதையர்கள் வளர்த்த மூடப் பழக்கவழக்கங்களில் மூழ்கிப் போயிருந்த பெரும்பான்மை

மக்களோ இக்கொள்கைக்கு வன்மையான எதிரிகளாக மாறினார்கள்.

உண்மையாளர், நம்பிக்கைக்கு உரியவர் என்றெல்லாம் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பாராட்டிய அதே மக்கள் அவருக்கு பைத்தியம் என்று பட்டம் சூட்டினார்கள் அவர்களையும், அவர்களது கொள்கையை ஏற்றுக் கொண்டவர்களையும் சொல்லொனாத துன்புறுத்தல்களுக்கும் சித்திரவதைகளுக்கும் ஆளாக்கினார்கள்.

இங்கு நாம் முக்கியமாக கவனிக்க வேண்டியது என்னவென்றால் – நபிகள் நாயகம் ஒரு புதிய கடவுளை அறிமுகப்படுத்தி அதை வணங்க மக்களை அழைக்கவில்லை. ஒரு புதிய மதத்தை நிறுவி அதில் சேருமாறு மக்களை அழைக்கவில்லை. மக்களுக்கும் நாட்டுக்கும் நன்மைபயக்கக் கூடிய ஒரு அழகிய சீர்திருத்தக் கொள்கையை முன்வைத்து அதன்பால்தான் அழைத்தார்கள். இந்த சீர்திருத்த இயக்கத்துக்கு எதிராகத்தான் பயங்கரவாத அடக்குமுறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டன.

பதிமூன்று வருடங்கள் தொடர்ந்த சித்திரவதைகளுக்குப் பிறகு இறைவனின் கட்டளைப் படி மதீனாவுக்கு புலம்பெயர்ந்து சென்றார்கள் நபிகளார். எல்லாக் காலத்திலும் பொறுமை என்ற ஆயுதம் கொண்டு தனக்கு எதிரான சித்திரவதைகளை எதிர்கொண்டார்கள். மற்றவர்களையும் அவ்வாறே எதிர்கொள்ளப் பணித்தார்கள்.

**நன்மையும் தீமையும் சமமாக மாட்டா, நீங்கள் (தீமையை) நன்மையைக் கொண்டே தடுத்துக் கொள்வீராக! அப்பொழுது, யாருக்கும் உமக்கிடையே, பகைமை இருந்ததோ, அவர் உற்ற நண்பரே போல் ஆகிவிடுவார். (திருக்குர்ஆன் *41:34*)**

அளவுக்கு மீறும் கட்டத்தில் தர்மத்தை நிலைநாட்ட தற்காப்புப் போர்களும் மேற்கொண்டார்கள். வெற்றியும் தோல்வியும் மாறிமாறி வந்ததன. இறுதியில் அதர்மத்துக்கு எதிரான போராட்டத்தில் தர்மம் வென்றது. நபிகளார் தன் தோழர்களோடு திரளாக மீண்டும் மதீனாவில் இருந்து திரும்பி வந்து தாயகமான மக்காவை வென்றேடுத்தபோது அனைவருக்கும் பொது மன்னிப்பு வழங்க அனைவரும் இஸ்லாத்தை ஏற்கிறார்கள்.

நபிகளார் தன் வாழ்வின் இறுதிக் கட்டத்தில் அதாவது மதீனாவுக்கு புலம்பெயர்ந்து சென்ற சில ஆண்டுகளிலேயே அரசியல் தலைமையும் ஆன்மீகத் தலைமையும் ஏற்று இறைவழிகாட்டுதலின் படி ஒரு முன்மாதிரியை அரசாட்சியை நிறுவிக் காட்டினார்கள். ஒரு அரசு சந்திக்கக்கூடிய எல்லா சூழ்நிலைகளுக்கும் தகுந்த முன்மாதிரி வழிகாட்டுதல் அங்கே காணக் கிடைக்கிறது.

# தனி மனித சீர்திருத்தம் எவ்வாறு?

மனிதன் தன்னைப்பற்றிய சில மறுக்கமுடியாத உண்மைகளை அடிக்கடி மறந்து விடுவதே அவன் பாவங்கள் செய்வதற்கு முக்கிய காரணமாக இருக்கிறது. அதில் மிக முக்கியமானவை மூன்று..

இஸ்லாம் இந்த மூன்று உண்மைகளை மனித மனங்களில் ஆழமாக விதைப்பதன்

மூலம் மனிதனை பாவங்களில் ஈடுபடுவதில் இருந்து தடுக்கிறது. மேலும் மூடநம்பிக்கைகளில் இருந்தும் பிரிவினை வாதங்களில் இருந்தும் விடுவித்து உலகளாவிய சகோதரத்துவத்தையும் மனித சமத்துவத்தையும் நாடுகளிடையே ஒற்றுமையையும் நிலைநாட்ட வழிகோலுகிறது. நபிகளாரின் முன்மாதிரியில் இருந்தும் அதைத்தான் நாம் காண்கிறோம்.

**1. ஒன்றே குலம்:**

அனைத்து மனிதகுலமும் ஆதித் தந்தை மற்றும் ஆதித் தாயின் சந்ததிகளே, நாம் அனைவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களே என்ற உண்மையை திருக்குர்ஆனில் இறைவன் இவ்வாறு நினைவூட்டுகிறான்:

**மனிதர்களே! உங்களை ஒரே ஒருவரிலிருந்து படைத்த உங்கள் இறைவனை அஞ்சுங்கள்! அவரிலிருந்து அவரது துணையைப் படைத்தான். அவ்விருவரிலிருந்து ஏராளமான ஆண்களையும்,பெண்களையும் பல்கிப் பெருகச் செய்தான்.... (திருக்குர்ஆன் 4:1)**

(அல்லாஹ் என்றால் வணக்கத்திற்குத் தகுதி வாய்ந்த ஒரே இறைவன் என்று பொருள்)

நாம் அனைவரும் ஒரே குடும்பத்தினரே என்ற உணர்வு மேலோங்கும்போது சகமனிதனை தனது சகோதரனாக சகோதரியாகப் பார்க்கும் பண்பு மனிதனுக்கு வந்துவிடுகிறது. அங்கு நிறத்தின், இனத்தின், மொழியின், நாட்டின் பெயரால் உடலெடுக்கும் பிரிவினைவாதங்களும் உயர்வு தாழ்வுகளும் கிள்ளி எறியப்படுகின்றன. மாற்று மொழியினரும் நிறத்தவரும் அண்டை மாநிலத்தவரும் நம் சகோதரர்களே என்ற உணர்வு மக்களை ஆட்கொண்டால் இன்று நடக்கும் பெரும்பாலான மனித உரிமை மீறல்களையும் கலவரங்களையும் இல்லாமல் ஆக்கிவிடலாம்.

**2. ஒருவனே இறைவன்:**

ஒன்றே மனிதகுலம் எனும்போது நம் அனைவருக்கும் இருப்பது ஒரே ஒரு இறைவனே என்பது தெளிவு. அவனது தன்மைகளை திருக்குர்ஆன் இவ்வாறு கற்பிக்கிறது:

**சொல்வீராக: இறைவன் ஒருவனே, அவன் தேவைகள் அற்றவன் அவன் யாரையும் பெற்றேடுக்கவும் இல்லை. அவனையும் யாரும் பெற்றெடுக்கவும் இல்லை. அவனுக்கு நிகராக யாரும் எதுவும் இல்லை. (திருக்குர்ஆன் 112:1-4)**

இறைவனை இவ்வாறு புரிந்துகொண்டு இடைததரகர்கள் யாருமின்றி அவனை நேரடியாக வணங்க இஸ்லாம் கற்றுத் தருகிறது. இவ்வாறு வணங்கும்போது கடவுளின் பெயரால் யாரும் யாரையும் ஏமாற்றவோ கடவுள் அல்லாதவற்றைக் காட்டி இவைதான் கடவுள் என்று கூறி பணம் சம்பாதிக்கவோ முடியாது. இடைத்தரகர்களும் மூடநம்பிக்கைகளும் வீண் சடங்கு சம்பிரதாயங்களும் ஒழிகின்றன.

இறைவன் அல்லாத கற்பனை உருவங்களுக்கோ உயிரும் உணர்வும் அற்ற படங்களுக்கோ சிலைகளுக்கோ எந்த இறைத்தன்மையும் கிடையாது என்றும் அவற்றை வணங்குவதோ அவற்றுக்கு மரியாதை செய்வதோ பெரும் பாவமாகும்

என்றும் இஸ்லாம் திட்டவட்டமாக அறிவிக்கிறது.

### 3. இறைவனின் நீதிவிசாரனையும் மறுமை வாழ்வும்.

இன்று நாம் வாழும் பிரபஞ்சமும் தற்காலிகமானது. இதில் மனிதர்களாகிய நம் வாழ்வும் தற்காலிகமானது. இதில் நாம் ஒவ்வொருவரும் குறிப்பிட்ட தவணையில் வந்து போகிறோம். இந்த குறுகிய வாழ்வில் யார் இறைவனின் கட்டளைகளுக்கு கீழ்படிந்து வாழ்கிறார்களோ அவர்களுக்கு சொர்க்கமும் கீழ்படியாதோருக்கு நரகமும் மறுமை வாழ்வில் வாய்க்கும். இந்த உண்மையை திருக்குர்ஆன் இவ்வாறு கூறுகிறது:

**ஒவ்வோர் ஆத்மாவும் மரணத்தைச் சுகித்தே ஆகவேண்டும் அன்றியும் – இறுதித் தீர்ப்பு நாளில் தான், உங்க(ள் செய்கைக)ளுக்குரிய பிரதி பலன்கள் முழுமையாகக் கொடுக்கப்படும். எனவே எவர் (நரக) நெருப்பிலிருந்து பாதுகாக்கப்பட்டுச் சுவர்க்கத்தில் பிரவேசிக்குமாறு செய்யப்படுகிறாரோ. அவர் நிச்சயமாக வெற்றியடைந்து விட்டார்.இவ்வுலக வாழ்க்கை மயக்கத்தை அளிக்கவல்ல (அற்ப இன்பப்) பொருளேயன்றி வேறில்லை. (திருக்குர்ஆன் *3:185*)**

அதாவது, இவ்வுலகில் நாம் செய்யும் பாவங்களுக்கும் அத்துமீறல்களுக்கும் தண்டனையாக நரகமும் புண்ணியங்களுக்கும் தியாகங்களுக்கும் பரிசாக சொர்க்கமும் கிடைக்கும். மேற்படி நம்பிக்கைகளை வெறும் எண்ணத்தளவில் விட்டுவிடாது செயல்முறையில் கொண்டுவர ஐவேளைத் தொழுகை, ஜகாத் என்னும் கட்டாய தர்மம், ரமஜான் மாதத்தில் விரதம் போன்றவற்றைக் கடமைகளாக்கியுள்ளது இஸ்லாம். மட்டுமல்ல இவற்றைக் கூட்டாக இணைந்து நிறைவேற்றவும் பணிக்கிறது. அதனால் சமூக சீர்திருத்தமும் சமத்துவம் சகோதரத்துவம் பேணுவதும் எளிதாகிறது.

இந்த நம்பிக்கைகளும் நடைமுறைகளும் சமூகத்தில் வேரூன்ற நாளடைவில் மொழி, நிறம், இடம் செல்வம் போன்ற எதுவும் மனித இனத்தைப் பிரிக்கமுடியாது. சமத்துவமும் சகோதரத்துவமும் தானாகவே சமூகத்தில் மலரும். நாட்டு வளங்களை சகோதர உணர்வோடும் இறைவழிகாட்டுதல்களின் அடிப்படையிலும் பங்கிட்டுக்கொள்ள மக்கள் தானாகவே முன்வருவார்கள். அதனால் ஏற்படும் இழப்புகளை இறைப்பொருத்தத்திற்காக மனமுவந்து ஏற்றுக் கொள்வார்கள்! அவ்வாறு மாநிலங்களுக்கு மத்தியில் பகைமை உணர்வுகள் மறையும். எல்லைக் கோடுகள் மறைந்து அகண்ட பாரதமும் உருவாகும்! காலப்போக்கில் நாடுகளும் மறைந்து அனைத்து உலகும் ஒன்றாக யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற கனவு நனவாகும்!

இது ஒரு மாயையோ அல்லது வெற்றுக்கோஷமோ அல்ல. இந்த நம்பிக்கையின் துளிகளை நீங்கள் உலகெங்கும் காண்கிறீர்கள். ஆம், உலகெங்கும் இக்கொள்கை பரவப்பரவ அதன் தாக்கத்தினால் ஒருகாலத்தில் ஜாதி, நிறம், இடம் போன்றவற்றால் பிளவுண்டு கிடந்த சமூகங்கள் பள்ளிவாசல்களில் அணியணியாக அணிவகுப்பதிலும் ஒரே சீருடையில் ஹஜ்ஜின் போது சங்கமிப்பதிலும் காண்கிறீர்கள்

# இறையச்சம் ஏற்படுத்தும் புரட்சிகள்

ஒன்றே குலம், ஒருவனே இறைவன், அவனிடமே நம் மீழுதல் என்ற இந்த நம்பிக்கைகளை ஆழமாக விதைத்து இறைவனை நேரடியாக வணங்கவும் துதிக்கவும் மக்களைப் பழக்கப் படுத்தினால் அவர்கள் பாவங்களில் இருந்து விலகி இருப்பார்கள். யாரும் காணாதபோதும் இறை உணர்வு பாவச் செயல்களில் இருந்து அவர்களைத் தடுக்கும். அப்போது அவர்கள் இணையம், செல்பேசிகள், தொலைக்காட்சிகள் இவற்றை தகுந்த முன்னெச்சரிக்கையோடு கையாள்வார்கள். வார்த்தைகளை அளந்து பேசுவார்கள். பிறர் உரிமைகளையும் உடமைகளையும் மதிப்பார்கள். துன்பங்கள் நேரும்போது சகிப்புத்தன்மையும் பிறருக்காக தன் உடமைகளையும் தியாகம் செய்யும் மனப்பான்மை அங்கு வளரும்.

● கல்வித்திட்டத்தில் இவற்றை உட்படுத்தினால் மாணவ மாணவிகள் கற்கும் கல்வியை ஆக்கபூர்வமான செயல்களுக்கு பயன்படுத்துவார்கள். சுயநலத்தை விட பொதுநலமே மிஞ்சும். கல்விப் பருவத்தில் குறுக்கிடும் தீய சக்திகளின் தாக்கங்களில் இருந்து விடுபட்டு கருமமே கண்ணாக இருக்க இளைஞர்களுக்கு உதவும்.

● வணிகர்கள், முதலாளிகள், தொழிலாளிகள் உள்ளங்களில் இவை விதைக்கப்பட்டால் வணிகமும் தொழிலும் சீர்பெறும், நியாயமும் நேர்மையும் அங்கு கோலோச்சும். மனித உரிமைகள் பரஸ்பரம் மதிக்கப்படும்.

● குடும்ப அங்கத்தினர்களிடம் இவை விதைக்கப்பட்டால் பரஸ்பர நம்பிக்கை, உரிமைகள் பேணுதல், விட்டுக்கொடுத்தல், ஆதரவற்றோரை அரவணைத்தல், தியாக உணர்வு போன்ற பண்புகள் மிளிரும். குடும்ப உறவுகள் பலப்படும்.

● குற்றவாளிகளிடமும் கைதிகளிடமும் இவை விதைக்கப்பட்டால் எந்த தண்டனைகளாலும் செய்யமுடியாத அற்புத சீர்திருத்தங்களை அங்கு செய்ய முடியும்.

● காவல் துறையினரிடமும் நீதித்துறையினரிடமும் அரசு அதிகாரங்களில் உள்ளோரிடமும் இவ்வுண்மைகள் விதைக்கப்பட்டால் அவரவர் கடமைகளை சரிவரப் பேணவும் மாற்றாரின் உரிமைகள் பேணவும் தூண்டும் பொறுப்புணர்வு அவர்களில் வளரும். அதிகார துஷ்பிரயோகங்கள் முடிவுக்கு வரும்.

இவ்வாறு ஒவ்வொரு துறையிலும் ஈடுபடும் மக்களிடம் இந்த மறுக்க முடியாத உண்மைகளை உரிய முறையில் விதைத்தால் அங்கே நிகழும் புரட்சிகளை யாரும் அனுமானிக்க முடியும்.

**அதேபோல.....**

● இன்றுள்ள அரசியல் வாதிகளிடமும் அரசியல் முனைவோரிடமும், ஆட்சிப்பொறுப்பில் உள்ளோரிடமும் இறைவனுக்கு அவர்கள் பதில் சொல்லியாக வேண்டும் என்ற உணர்வு ஊட்டப்பட்டு அதை அவர்கள் சரிவர உணர்ந்தால் அவர்களில் யாரும் ஆட்சிப்பொறுப்பை தேடி அலைய மாட்டார்கள்! ஏற்றவர்கள்

அதை விட்டும் ஓடி ஒழிவார்கள்! ..... அல்லது ஏற்ற பொறுப்பை கண்ணும் கருத்துமாக நிறைவேற்றுவார்கள்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

- **நீங்கள் ஆட்சிப் பதவியை அடைய ஆசைப்படாதீர்கள். ஆனால் மறுமை நாளிலோ அதற்காக வருத்தப்படுவீர்கள் (அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி), நூல்: புகாரி 7148)**
- **நினைவில் கொள்க! நீங்கள் ஒவ்வொருவரும் பொறுப்பாளிகளே உங்களில் ஒவ்வொருவரும் தத்தமது பொறுப்பிலுள்ளவை பற்றி (மறுமையில்) விசாரிக்கப்படுவீர்கள். ஆட்சித் தலைவர் மக்களின் பொறுப்பாளர் ஆவார். அவர் தம் குடிமக்கள் குறித்து விசாரிக்கப்படுவார். .......உங்களில் ஒவ்வொருவரும் பொறுப்பாளியே! உங்களில் ஒவ்வொருவரும் தத்தமது பொறுப்புக்குட்பட்டவை குறித்து விசாரிக்கப்படுவீர்கள்.' (நூல்: புகாரி 7138)**

ஆம், மறுமை நாளில் பொறுப்புக்களை சரிவர நிறைவேற்றாதோருக்கு நரக நெருப்பின் வேதனையல்லவா காத்திருக்கிறது!

# ஆட்சியாளர்களுக்கு இறையச்சம் வந்துவிட்டால்....?

ஆட்சிப் பொறுப்பு என்பது இறைவன் வழங்கும் அமானிதம் ஆகையால் அவர்கள் இறைவனால் விசாரிக்கப்படுவார்கள் என்ற பொறுப்புணர்வோடு ஆட்சியாளர்கள் செயல்பட வேண்டும். குடிமக்களின் குறைகள் நியாயமானதாக இருக்கும்பட்சம் அவை நிவர்த்தி செய்யப்படாமல் இருந்தால் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவர்கள் இறைவன் முன் குற்றவாளிகளே. இந்த அச்சம் ஆட்சியாளர்களை பொறுப்புணர்வு மிக்கவர்களாக ஆக்குகிறது. அதனால் சரித்திரத்தில் பல இஸ்லாமிய ஜனாதிபதிகள் இரவுபகலாக கண்விழித்து மக்கள் சேவையாற்றினார்கள். காந்தியடிகள் கலீபா உமரின் ஆட்சி போன்று இந்தியாவில் வரவேண்டும் என்று ஆசைப்பட்டது இதனால்தான்.

ஆட்சிப்பொறுப்பை ஏற்ற சான்றோர்கள் அவர்களாக அதைத் தேடி அலையவில்லை. மாறாக ஆட்சிப்பொறுப்பு அவர்கள் மீது சுமத்தப்பட்டது. நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் மரணிக்கும்வரை ஆன்மீகத் தலைமையும் அரசியல் தலைமையும் அவர் கைவசமே இருந்தது. இரு தலைமையும் ஒருசேர அவரிடம் இருந்தும் அவர் வாழ்ந்த எளிய வாழ்க்கை பிற்காலத்தவருக்கு முன்மாதிரியானது. அரசுக் கருவூலம் செல்வத்தால் நிரம்பி வழிந்தபோதும் அவரும் அவரது குடும்பத்தாரும் வறுமையிலேயே வாழ்ந்தனர். அரசுக் கருவூலத்தின் செல்வத்தை தனக்கும் தன் குடும்பத்தாருக்கும் மட்டுமல்ல பின்வரும் தன் தலைமுறையினர் அனைவருக்கும் சட்டவிரோதமாக்கினார்.

அரசாங்கக் கருவூலத்தை சேர்ந்த பேரீத்தப்பழக் குவியலில் இருந்து தன் சிறுவயதுப் பேரன் ஹசன் எடுத்து வாயிலிட்ட ஒரு பேரீத்தம்பழத்தையும் 'இது நமக்கு அனுமதிக்கப்பட்டது அல்ல, துப்பு துப்பு' என்று கூறி துப்ப வைத்தார் அந்த மாமனிதர்!

இறைவழிகாட்டலில் நின்று ஆட்சி நடத்திய அப்பேரரசர் முஹம்மத் (ஸல்)

அவர்கள் உட்கொண்ட உணவைப் பார்க்கின்ற போது மிகப்பெரும் ஆச்சரியமாகவே இருக்கின்றது. அரசர்கள் உண்ட உணவுகளை அவர்கள் கண்டதில்லை. ஏன் சராசரி மனிதன் உண்ணுகின்ற உணவைக் கூட அவர்கள் தொடர்ந்து உண்டதில்லை என்பதற்கு அவர்களின் தூய வரலாறு எமக்கு தக்க சான்றாக இருக்கின்றது.

● 'எங்கள் வீடுகளில் மூன்று மாதங்கள் அடுப்பு பற்ற வைக்கப் படாமலே கழிந்திருக்கிறது என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மனைவி ஆயிஷா (ரலி) அவர்கள் கூறினார்கள். அப்போது 'என் சிறிய தாயாரே! அப்படியானால் உயிர் வாழ எதை உண்பீர்கள்? என்று நான் கேட்டேன். அதற்கு ஆயிஷா (ரலி) அவர்கள், 'பேரீச்சம் பழமும், தண்ணீரும் தான் எங்கள் உணவாக இருந்தது. சில நேரங்களில் பக்கத்து வீட்டைச் சேர்ந்த தோழர்கள் கறந்த பாலை அன்பளிப்பாகத் தருவார்கள் அதை அருந்துவோம்' என விடையளித்தார்கள். (அறிவிப்பவர்: உர்வா (ரலி), நூல்: புகாரி 2567,6459)

# மக்களாட்சியை நடைமுறைப்படுத்திய மாமனிதர்!

மன்னர்களும் மன்னர்களின் பரம்பரைகள் மட்டுமல்ல, திறமையுள்ள எந்தப் பாமரனும் ஆட்சிக் கட்டிலில் ஏறலாம் என்பதை உலகில் முதன்முதலாக விதியாக்கியதும் தொடர்ந்து நடைமுறைப் படுத்தியதும் இஸ்லாம்தான்!

நாடும் மக்களும் நாட்டு வளங்களும் அனைத்தும் மன்னனுக்கே சொந்தம் என்ற எழுதப்படாத விதியையும் 'மன்னன் எவ்வழி, மக்கள் அவ்வழி!' என்ற மரபுகளையும் மாற்றி அமைத்தது இஸ்லாத்தின் வரவு! நாடும் மக்களும் மட்டுமல்ல, உலகமும் அதிலுள்ளவை அனைத்தும் இறைவனுக்கே சொந்தம் என்றும் மனிதனிடம் தற்காலிகமாக வழங்கப்படுவதே ஆட்சியதிகாரம் என்று அரசியலுக்கு புது இலக்கணம் வகுத்தது இஸ்லாம். அரசனாயினும் ஆண்டியாயினும் அவரவர்க்கு இவ்வுலகில் இறைவனால் வழங்கப்பட்ட பொறுப்புக்கள் குறித்து மறுமையில் விசாரிக்கப்பட உள்ளார்கள் என்ற உண்மையை நினைவூட்டி அதை அரசியலுக்கு அடிப்படையாக்கியது இஸ்லாம்!

**நபிகளார் நிறுவிய சமத்துவ அரசாங்கம்**

நபிகள் நாயகம் (ஸல்) அன்றுவரை இருந்து வந்த அரசர்களின் அல்லது ஆட்சியாளர்களின் நடைமுறைகளை இஸ்லாமிய நடைமுறை மூலம் மாற்றிக் காண்பித்தார் நபிகளார்.

● பொதுவாக உலகில் முடியாட்சிகள் எப்படி இருக்குமோ அவ்வாறே அரபு நாட்டு அரசாங்கங்கள் செயற்பட்டுவந்தன. அரசாங்க அலங்காரங்களோடு உயர்ந்த அரண்மனை மாட மாளிகைகளில் சகல வசதிகளோடு தாங்கிய சௌந்தர்ய சிம்மாசனங்களில் பெருமைமிகு பட்டாடைகளை உடுத்திக் கொண்டு உடல் முழுக்க பொன் நகைகளைப் போர்த்திக் கொண்டு பொன்னாலும், வெள்ளியாலும் இழைக்கப்பட்ட இருக்கைகளில் சுற்றி நிற்கும் இளநங்கையர் வீசும் சாமரத்திலிருந்து வெளிப்படும் காற்றை அனுபவித்துக் கொண்டு உல்லாச

வாழ்க்கையில் திளைத்துக் கொண்டிருந்த ஆட்சியாளர்கள், அரசவை பிரபுக்களுக்கு செலுத்தப்பட்டு வந்த மரியாதை இஸ்லாம் ஆட்சிக் கட்டில் ஏறியபின் தடுத்து நிறுத்தப் பட்டது.

● அரசவைக்கே அணிகலன்களாக திகழ்ந்த பொன் ஆசனங்களும், வெள்ளி இருக்கைகளும் இல்லாது போயின.

● ஆட்சியாளர்களின் வருகையை கட்டியம் கூறி அறிவிக்கும் நடைமுறையும் பராக், பராக் ஒலி ஓசைகளும் ஒழிந்து போயின.

● அரசன் விதிப்பதே சட்டம் என்ற நிலைமாறி இறைவன் விதிப்பதே சட்டம் என்ற நிலை அமுலுக்கு வந்தது.

● பொது அவைகளில் தலைவர்களுக்கு முன்னால் வெளிப்படையாக மக்கள் பேசுவதற்குக்கூட சுதந்திரம் இல்லாமல் இருந்தது. ஆனால் இக்குறையைப் போக்க ஆட்சித் தலைவரும் அவருடைய அதிகாரிகளும் பொதுமக்கள் எளிதாகச் சந்தித்துக் கொள்ளும் பள்ளி வாசல்களையே தங்களுடைய செயலகங்களாக ஆக்கிக் கொண்டனர்.

அந்த காலகட்டத்தில் ஆட்சியாளர்களும், மன்னர்களும் அரசவையை சார்ந்தவர்களும் எந்த சட்டத்திற்கும் எட்டாத தூரத்தில் இருந்தார்கள். சட்ட நெறிமுறைகள் அவர்களை ஒரு போதும் கட்டுப்படுத்தாது. ஆனால், இங்கு பார்த்தால் இறைத்தூதர் இடத்திலும் அவருடைய வீட்டார்களிடத்திலும் தான் முதன் முதலில் சட்டம் செயல்படத் தொடங்கும். இறைத்தூதரின் வீட்டைச் சார்ந்தவர்கள் ஏதேனும் ஒரு தவறை செய்து விட்டால் அவர்களுக்கு இரட்டிப்பு தண்டனை கிடைக்கும் என்று இறைவன் கட்டளையே பிறப்பித்திருந்தான்.

# அபூபக்கர்(ரலி) அவர்களின் ஜனாதிபதி உரை

நபிகளாரின் மரணத்துக்குப் பிறகு ஆட்சிப்பொறுப்பை ஏற்றவர் கலீபா அபூபக்கர்(ரலி). (கலீஃபா என்றால் ஜனாதிபதி அல்லது மக்களின் தலைவர் என்று பொருள்)

ஆட்சியாளராக பதவி ஏற்ற ஜனாதிபதி அபுபக்கர் தனது மக்களிடம் ஒரு சொற்பொழிவு நிகழ்த்துகிறார்.

'மனிதர்களே! உங்கள் தலைவனாக நான் தெரிவு செய்யப்பட்டுள்ளேன். நான் உங்கள் எல்லோரையும் விடவும் சிறந்தவன் என்று நான் எண்ணவில்லை. நான் சத்தியம் தவறாது நடந்தால் நீங்கள் எனக்குத் துணையாக இருக்க வேண்டும். நான் பிழை செய்தால் நீங்கள் என்னைத் திருத்த வேண்டும். உங்கள் விவகாரங்களில் நான் இறைவனின் கட்டளைப்படி நடந்து கொள்ளும் போது நீங்கள் எனக்கு கட்டுப்பட வேண்டும். இறைவனின் தூதர் சென்ற வழியில்தான் நானும் செல்வேன். நான் நேர்மையை கைக் கொண்டு ஒழுகினால் நீங்கள் என்னைப் பின்பற்றுங்கள். நான் கோணல் வழி சென்றால் என்னை நேர்வழிப்படுத்துங்கள்.' - (ஹூகூகல் இன்சான், பக்கம் 160)

அவர் ஆட்சிப்பொறுப்பை ஏற்றதும் அதுவரை செய்துகோண்டிருந்த

வியாபாரத்தை தொடர முடியாததால் அவரை அரசுக் கருவூலத்தில் இருந்து ஒரு ஊதியத்தை பெற்றுக்கொள்ளுமாறு வற்புறுத்தப்பட்டார். ஒரு சிறு தொகையை ஊதியமாகப் பெற அவரும் ஒப்புக்கொண்டார். எளிமையான வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கையில் ஒருநாள் தன் மனைவி உணவோடு ஒரு இனிப்புப் பதார்த்தத்தையும் பரிமாறினார். ஆச்சரியப்பட்ட அபூபக்கர் 'இது எங்கிருந்து உனக்கு?' என்று மனைவியை வினவினார்.

"நீங்கள் தினமும் செலவுக்குத் தரும் பணத்தில் இருந்து சிறுகச்சிறுக சேமித்து வைத்தேன். அதில் இருந்து செய்ததுதான் இந்த இனிப்பு"

"சேமிக்கும் அளவுக்கு நான் ஊதியம் பெற்று வந்துள்ளேனா? இது கூடாது!" என்றார் அபூபக்கர்.

அடுத்தமாதம் முதல் தன் ஊதியத்தின் அளவைக் குறைக்க ஆணையிட்டார் அபூபக்கர்!

ஊதிய உயர்வு கோரி போராட்டங்கள் நடப்பதைக் கேள்விப்பட்டிருக்கிறோம். ஊதியக் குறைவு கோரிப் போராடியவர் பற்றி எங்காவது கேட்டிருக்கிறோமா?

# வரலாறு போற்றும் கலீ:.பா உமர்(ரலி)

இறையச்சமும் மறுமை நம்பிக்கையும் மனித மனங்களில் விதைக்கப் பட்டால் அது உலகில் எப்படிப்பட்ட அற்புத மாற்றங்களை உண்டாக்கும் எனபதை விளங்க உமர் (ரலி) அவர்களின் வாழ்க்கை ஒரு சிறந்த உதாரணம்.

அறியாமைக் காலத்தில் மக்காவாசிகளோடு சேர்ந்து நபிகள் நாயகத்தையே கொல்லப் புறப்பட்டவர் உமர் அவர்கள். வழியில் அவர் செவியுற்ற திருக்குர்ஆன் வசனங்கள் அவரது வாழ்க்கையின் திசையை நேர் எதிராக மாற்றியது. அவருக்குள் படைத்த இறைவனைப் பற்றிய முறையான உணர்வும் மறுமை நம்பிக்கையும் நுழைந்தன. உடன் இஸ்லாத்தை ஏற்றார். தொடர்ந்து நபிகளாரின் ஆருயிர் தோழரானார். நபிகளாரின் மரணத்திற்குப் பின் அவரது இன்னொரு தோழரான அபுபக்கர்(ரலி) அவர்களும் அவரை அடுத்து உமர் (ரலி) அவர்களும் மக்களின் ஜனாதிபதிகளாகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள். அவராகப் பதவியைத் தேடி அலையவில்லை. ஆனால் ஆட்சிப்பொறுப்பு அவரைத் தேடி வந்தது. சூழ்நிலை உணர்ந்து அதை ஏற்றுக் கொண்டார்கள்.

'நீங்கள் ஒவ்வொருவரும் பொறுப்புதாரிகளே, உங்கள் பொறுப்புகளை நிறைவேற்றியது பற்றி மறுமையில் இறைவனால் வினவப்படுவீர்கள்' என்றல்லவா கற்பிக்கிறது இறை மார்க்கம்.! சாதாரணமான குடும்பப் பொறுப்புக்கே விசாரணை என்றிருக்கும்போது ஆட்சிப் பொறுப்பு என்றால் அலட்சியம் காட்ட முடியுமா? இறையச்சம் உள்ளவர்கள் பதவியில் அமர்ந்தால் நிம்மதியாக உறங்கமுடியுமா? ஆம், மக்களின் குறைகளை ஆராய்வதற்காக இரவுகளை ஊர் உலா செல்வதில் செலவிட்டார் கலீபா உமர். அவரது வாழ்வில் இதுபோன்ற பல சம்பவங்கள் நிறைந்திருந்தாலும் விரிவஞ்சி ஒரே ஒரு சம்பவத்தை மட்டும் இங்கு காண்போம்:

ஒருநாள் இரவு உமரும் அவரது பணியாளர் அஸ்லமும் உலா கிளம்பினார்கள். மதீனாவிலிருந்து தோராயமாய் 5 கி.மீ. தொலைவிருக்கும் சரார் (Sarar) என்ற

சிற்றூரை இருவரும் நெருங்கும்போது தொலைவில் நெருப்பு எரிவது தெரிந்தது. பிரகாசமான விளக்கொளி வசதிகள் எதுவும் இல்லாத காலமது. அதனாலேயே இரவில் நெருப்பு விளச்சம் மேலும் துல்லியமாய்க் கவனத்தை ஈர்த்தது.

அதைக் கண்ட உமர், "ஓ அஸ்லம்! யாரோ பயணிகள் இந்த குளிர்மிக்க இரவில் அங்கு வந்து தங்கியிருக்கிறார்கள் போலிருக்கிறது. வாருங்கள் சென்று பார்ப்போம்" என்றார்.

இருவரும் அங்கு விரைந்தார்கள். அருகில் நெருங்கினால், ஒரு பெண்ணும் அவளுடைய சிறு பிள்ளைகளும் அமர்ந்திருந்தனர். அருகில் மூட்டப்பட்ட அடுப்பின் மேல் ஒரு பானை இருந்தது. அவளுடைய குழந்தைகளோ அழுது கொண்டிருந்தனர்.

"அஸ்ஸலாமு அலைக்கும், ஒளியின் மக்களே" என்றார் உமர்.

"வ அலைக்கும் ஸலாம்" என்று பதிலளித்தார் அந்தப் பெண்.

"நான் அருகே வரலாமா?" என்று உமர் கேட்க, "ஏதேனும் நல்லது செய்பவராய் இருந்தால் வரவும் இல்லையெனில் எங்களைத் தொந்தரவு செய்யாமல் சென்று விடவும்," என்று கறாராய் பதில் வந்தது.

அவர்களுக்கு அருகில் சென்றவர், "இங்கு என்ன நடக்கிறது?" என்று விசாரித்தார்.

"இரவும் இந்தக் குளிரும் எங்களை இங்குத் தங்க வைத்து விட்டன."

"சரி. இந்தக் குழந்தைகளுக்கு என்ன ஆயிற்று? ஏன் இப்படி அழுகிறார்கள்."

"அவர்களுக்குப் பசி."

"அந்தப் பானையில் என்ன?" என்றார்.

"அதுவா, அதில் வெறும் தண்ணீரை ஊற்றிக் கொதிக்க வைத்துக் கொண்டிருக்கிறேன். சமையலாகிக் கொண்டிருக்கிறது என்று பிள்ளைகள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். களைப்பில் சிறிது நேரத்தில் உறங்கி விடுவார்கள்," என்று அநதப் பெண் கூறியதைக் கேட்டு உமர் ஆச்சரியமடைய, அவர் அடுத்துக் கூறியது அதிர்ச்சியளித்தது.

"ஒருநாள் இறைவன் எங்களுக்கும் உமருக்கும் மத்தியில் நீதியளிப்பான்!"

மக்கள் அனைவருக்கும் அக்காலத்தில் கலீஃபாவின் உருவம் அறிமுகமாய் இருந்ததில்லை. அதனால் தாம் பேசிக் கொண்டிருப்பது கலீஃபா உமரிடம் என்று அப்பெண்மணிக்குத் தெரியவில்லை.

"இறைவனின் கருணை உங்கள் மேல் பொழிவதாக. உமருக்கு உங்களைப் பற்றி தெரிந்திருக்க வாய்ப்பில்லையே" என்றார் உமர்.

"அதெப்படி? அவர்தானே மக்களின் நிர்வாகத்திற்குப் பொறுப்பேற்றுக் கொண்டார். பிறகு எங்கள் நிலையை அவர் அறிந்துகொள்ள இயலாவிடில் அவர் என்ன கலீஃபா?"

இதென்ன எதிர்பார்ப்பு? அளவிற்கு அதிகமான எதிர்பார்ப்பா இல்லையா? ஒவ்வொரு குடிமகனின் தனிப்பட்ட வறுமையையும் பிரச்சினையையும் ஓர் ஆட்சியாளர் தெரிந்து வைத்துக் கொள்ள முடியுமா என்ன? ஆனால் உமர் அந்தப் பெண்ணை கடிந்து கொள்ளவில்லை அதட்டவில்லை சமாதானம்

சொல்லவில்லை 'சரிதான் போம்மா' என்று உதாசீனப்படுத்தவில்லை. அஸ்லமை நோக்கித் திரும்பி இரண்டே வார்த்தை சொன்னார். "வா போகலாம்."

ஓடினார்கள்! கலீஃபாவும் அவரது தோழரும் அந்த இருள்படிந்த இரவில் 5 கி.மீ. ஓடினார்கள்! எங்கே? கோதுமையும் இதர உணவுப் பொருட்களும் சேமித்து வைக்கும் அரசாங்கக் கிடங்கு ஒன்று இருந்தது. அந்தக் கிடங்கிற்கு ஓடினார்கள். ஒரு சாக்குப் பையில் கோதுமையையும் பதப்படுத்தப்பட்ட கொழுப்பையும் எடுத்துக் கொண்டார் உமர்.

"அஸ்லம் இங்கு வா! இதை என் தோளில் ஏற்று!"

"அமீருல் மூஃமினின்! அதை இங்குக் கொடுங்கள், நான் தூக்கி வருகிறேன்," என்றார் அஸ்லம்.

கோபம் வந்துவிட்டது உமருக்கு. "ஏனய்யா? மறுமையில் நீயா வந்து என்னுடைய சுமையை சுமப்பாய்?" என்று அஸ்லத்தைக் கடுமையாய் அதட்ட மறுபேச்சு பேசாமல் அஸ்லம் மூட்டையைத் தூக்கி கலீஃபாவின் தோளில் வைத்தார். இப்பொழுது மீண்டும் 5 கி.மீ. தொலைவில் உள்ள சரார் நோக்கி ஓடினார் உமர். பின்னாலேயே மூச்சிரைக்க அஸ்லமும் ஓடினார்.

அந்தப் பயணிகள் தங்கியிருந்த இடத்தை அடைந்தவர், சுமையைத் தரையில் இறக்கி வைத்துவிட்டு, சிறிதளவு கோதுமையை எடுத்து அந்தப் பெண்ணிடம் கொடுத்து, "இந்தாருங்கள் இதைப் புடைத்துக் கொடுங்கள், நான் சமைக்கிறேன்" என்று சொல்லிவிட்டு மண்டியிட்டுக் குனிந்து பானையின் கீழிருந்த அடுப்பு நெருப்பை ஊதி ஊதிப் பெரிதாக்க ஆரம்பித்துவிட்டார். எழும்பிய புகை அவரது தாடியின் ஊடே புகுந்து வெளிவருவதைப் பார்த்துக் கொண்டு நின்றார் அஸ்லம்.

பிறகு அந்தக் கோதுமையைச் சமைத்து, அந்தப் பெண்ணிடம் பானையை எடுத்துச் சென்று, "ஏதாவது பாத்திரம் எடுத்து வாருங்கள்," என்றார்.

அந்தப் பெண் ஒரு பாத்திரத்தை எடுத்துவர, அதில் சமைத்ததைப் பரிமாறியவர், "நான் இதை பாத்திரத்தில் பரப்பி சூடு தணிய வைக்கிறேன் தாங்கள் பிள்ளைகளுக்கு ஊட்டுங்கள்."

அந்தச் சிறுவர்கள் உண்ண உண்ண, அவர்கள் வயிறு நிரம்பும் வரை அருகில் அமர்ந்து பார்த்துக் கொண்டிருந்தார். பிறகு மீத உணவையும் மற்றவற்றையும் அவர்களுக்கு அளித்துவிட்டு உமர் எழ அஸ்லமும் எழுந்து கொண்டார். அப்பொழுது அந்தப் பெண், "இறைவன் உங்களுக்கு நல்ல கைம்மாறு அளிப்பானாக. அந்த உமரை விட நீங்கள்தான் கலீஃபாவாய் இருப்பதற்கு மிகவும் பொருத்தமானவர்" என்றார் நெகிழ்ச்சியுடன்.

"நல்லது உரையுங்கள். கலீஃபாவிடம் நீங்கள் செல்ல நேர்ந்தால், இறைவன் நாடினால் அங்கு என்னைக் காண்பீர்கள்" என்றார் உமரும்.

. பசி அடங்கிய சிறுவர்கள் கட்டிப்பிடித்து உருண்டு விளையாடி, பின்னர் உறங்கும் வரை பார்த்துக் கொண்டிருந்தார்.

அதன் பிறகு எழுந்து "எல்லாம் வல்ல இறைவனுக்கே எல்லாப் புகழும்" என்று கூறியவர், "ஓ அஸ்லம்! பசி அந்தச் சிறுவர்களைத் தூங்க விடாமல் அழ வைத்துவிட்டது. அவர்கள் அமைதியடைந்து தூங்கும் வரை நான் கிளம்பிச்

செல்ல விரும்பவில்லை. வாருங்கள் போகலாம்!"

இந்தச் சேவையை எப்படி வர்ணிப்பது? எத்தகைய இலவச மக்கள் உதவித் திட்டத்திற்குள் இதை வரையறுப்பது? உதவி என்ற பெயரில் தூக்கியெறியும் சில்லறைக்கெல்லாம் அரசாங்கமும் தலைவர்களும் செய்தித்தாள்களில் முழுப் பக்கத்திற்கு விளம்பரம் தேடும் இக்காலத்தில, மூட்டைத் தூக்கி, சமைத்து, பரிமாறி, சேவை செய்துவிட்டு தாம் யாரென்பதை சூசகமாய்க் கூடத் தெரிவிக்காமல் திரும்பும் தலைவரை என்ன சொல்லிப் புகழ்வது?

ஆம் அன்பர்களே, இப்படிப்பட்ட அரசியல் தலைவர்கள் நமக்கும் வாய்த்தால் எப்படி இருக்கும்? அற்புதங்கள் நிகழாதா? இது ஒரு கற்பனை அல்ல. நிச்சயமாக நிகழக் கூடிய நிஜம். முறையான இறைநம்பிக்கையும் மறுமை நம்பிக்கையும் மனித மனங்களில் நுழைந்தால் பதவிக்கும் புகழுக்கும் பணத்திற்கும் பின் அரசியல்வாதிகள் அலைய மாட்டார்கள். பதவிகள் பாரமாகும். அதையும் மீறி அவர்கள் மீது பதவிகள் சுமத்தப் பட்டால் இறையச்சம் அவர்களை உறங்கவிடாது.

# சரித்திரம் உமரை நினைத்து ஏன் ஏங்குகிறது?

உமரைப் போன்ற ஆட்சியாளர் உலகை ஆண்டால் அதில் வாழ யாருக்குத்தான் ஆசை இருக்காது? காந்தியடிகள் மட்டுமல்ல, பல சரித்திர ஆய்வாளர்களும் தங்கள் ஏக்கங்களை வெளிப்படுத்தி உள்ளார்கள்.

மதீனாவில் தோன்றிய சிற்றரசு உமரின் ஆட்சியில் சில ஆண்டுகளில் மாபெரிய பேரரசானது. அன்றைய வல்லரசுகள் உமரின் காலடியில் வீழ்ந்தன. பாரசீகம் இராக் சிரியா பாலஸ்தீனம் லிபியா எகிப்து ஆர்மீனியா இன்றைய ஆப்கானிஸ்தானின் சில பகுதிகள் வரை அவரது சாம்ராஜ்ய எல்லை விரிந்த்து.

வெற்றி கொள்ளப் பட்ட பகுதிகள் அனைத்திலும் திட்டமிட்ட நீதிமிக்க நிர்வாகத்தை உமர் (ரல்) வழங்கியதால் உமர் என்ற பெயர் மக்களுக்கு ஆறுதலை அளிக்கிற சொல்லாகவும் எதிர்களை கிலிபிடிக்கச் செய்கிற சொல்லாகவும் எங்கும் எதிரொளித்தது. இத்தனையும் ஒரு பத்தாண்டுகளுக்குள் நடந்த்து. அதிலும் ஆச்சரியம் என்னெவென்றால் தன்னுடைய படை வென்றெடுத்த பல பகுதிகளை அவர் நேரில் சென்று பார்க்க கூட வாய்ப்புக் கிட்டவில்லை. மதீனா நகரின் பள்ளிவாசல் முற்றத்தில் ஒரு பஞ்சாயத்து தலைவர் போல உட்கார்ந்து கொண்டு பல லட்சம் சதுரமைல்களை அவர் ஆட்சி செய்தார். தனது நிர்வாக நிலப்பரப்பின் எந்த மூலையிலும் என்ன நடக்கிறது என்பதை அவர் அறிந்து கொண்டார். நாட்டை பல பகுதிகளாக பிரித்து தகுதி வாய்ந்த நம்பிக்கைக்குரிய ஆளுநர்களை நியமித்து அவர்களை தன் கைப்பிடியில் வைத்துக் கொண்டார். ஆளுநர்களின் ஒரு சிறிய தவறும் கூட – அது தொழுகை நடத்துவதில் செய்யப் படும் சிறு குறையாக இருந்தாலும் கூட மதீனாவில் விசாரிக்கப் படும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அதிகாரிகள் மீது புகார் அளிப்பவர்கள் தங்களது புகாருக்கு மேல் என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது என்பதை அறிந்து கொண்டனர். அதே நேரத்தில் புகார் கொடுத்தவர்கள் அச்சமற்று வாழ்வதற்கான அடிப்படையான

உத்தரவாதமும் உமர் (ரலி) ஆட்சியில் மக்களுக்கு கிடைத்த்து.
19 ம் நூற்றாண்டைச் சேர்ந்த அமெரிக்க இலக்கிய வாதியும், அரசியல் பிரமுகரும் வரலாற்று ஆய்வாளருமான வாசிங்டன் இர்விங்க் உமர் (ரலி) அவர்களின் வாழ்க்கை முறையையும் ஆட்சிமுறையையும் பற்றி சில வரிகளில் வருணிக்கிறார். உலகிற்கு உமர் அவர்கள் விட்டுச் சென்ற தடங்களின் ஒரு சிறு பதிவு அது. இதோ இர்விங் எழுதுகிறார்:
“உமரின் முழு வரலாறு அவரை தீட்சணயம் மிக்க அறிவாளியாகவும், எதற்கும் வளையாத நேர்மையாளராகவும், நீதியின் மீது அதிக பிடிமானம் கொண்டவராகவும் காட்டுகிறது. இஸ்லாமிய சாம்ராஜ்யத்தை நிறுவதிலும் முஹம்மது நபியின் நடைமுறைகளை எடுத்துச் செல்வதிலும் அபூபக்கருக்கு உதவுவதிலும் அவர் அனைவரைக் காட்டிலும் முன்னணியில் இருந்தார். முஸ்லிம்களால் விரைவாக கைகொள்ளப்பட்ட பகுதிகள் அனைத்திலும் சட்டத்தின் கட்டுப்பாடான ஆட்சியை வழங்குவதற்காக தீட்சண்யம் மிக்க நடைமுறைகளை அவர் நிறுவினார். படைத்தலைவர்கள் மீது அவரது பிடி இரும்புப்பிடியாக இருந்த்து. படைத்தலைவர்களை தன்னுடைய கட்டுக்குள் வைத்திருந்தது அவரது ஆட்சித்திறனுக்கு ஒரு அடையளமாகும். படைத்தலைவர்கள் பிரபலமானவராகவும், வெகு தூரத்தில் அவர்கள் வென்றெடுத்த பகுதிகளில் இருந்த போதும் உமருக்கு கட்டுப்படுவதிலிருந்து அவர்கள் துளியும் விலக வில்லை.
எளிமையான வாழ்க்கையை மேற்கொள்வதிலும், ஆடம்பரத்தை உதறுவதிலும் தனக்கு முந்திச் சென்ற இறைத்தூதருடையவும் அபூபக்கருடையவும் முன்னுதாரணத்தை அவற்றை அப்படியே பின்பற்றினார். தான் கடைபிடித்த அதே வழிமுறைகளை தன்னுடைய படைத்தலைவர்களுக்கும் அவர் கடிதம் மூலம் அறிவுறுத்தினார். “ஆடம்பரமாக உண்ணுவதிலும் ஆடை அணிவதிலும் பாரசீகர்களின் பகட்டை உங்களுக்கு நான் எச்சரிக்கிறேன். உங்களது தேசத்தின் எளிமையையே நீங்கள் தொடர்ந்து கடைபிடியுங்கள்! அல்லாஹ் உங்களுக்கு தொடர்ந்து வெற்றியை தருவான் என்று தொடர்ந்து வலியுறுத்தினார். இத்தகை குற்றச்சாட்டு எந்த அதிகாரி மீதாவது சொல்லப் பட்டால் அவர்ருக்கு கடுமையாக தண்டனை வழங்கினார். அரசாங்கத்திடம் மிஞ்சியிருக்கிற பணத்தை வாரந்தோறும் பங்கு வைத்த அவர் கேட்டு வருகிறவர்கள் அனைவருக்கும் கொடுக்காமல் தேவையுடையவர்களை கண்டறிந்து பங்குவைத்தார். “இந்த உலகின் அருள்வளங்களை அல்லாஹ் நமீது பொழிவது, நாம் நமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே அன்றி நாம் செய்த நனமைகளுக்கான கூலியாக அல்ல. அவைகளுக்கான கூலி மறுமையில் கிடைக்கும் என்று அவர் கூறுவார்.
(***Washington Irving - Mahomet and His Successors*** என்ற தனது புத்தகத்தில்)
இர்விங்கின் இந்த வார்த்தைகள் உமர் (ரலி) அவர்களின் ஆட்சிமுறையையும் வாழக்கைப் பாங்கையும் ஒரு சேர விவரிக்கின்றன
அவரது வரலாற்றை வாசிக்கிற யாரும் ஆச்சரியப் படாமலும் அழாமலும் வாசித்து

விட முடியாது.
18 ம் நூற்றாண்டின் இங்கிலாந்தில் மிகவும் பிரபலமான வரலாற்றாசிரியர் கிப்பன் அந்த ஆச்சரியத்தை வெளிப்படுத்துகிறார்.
"தொலிக் கோதுமையினால் செய்யப்பட்ட ரொட்டி அல்லது பேரீத்தம் பழங்களே அவரது உணவாகவும், சாதரண தண்ணீரே அவரது பானமாகவும் இருந்தது. அவரது சட்டை பனிரெண்டு இடங்களில் தையல் போடப்பட்டிருந்த்து. பாரசீக இராஜதந்திரி ஒருவர் மரியாதை நிமித்தமாக அவரைச சந்திக்க மதீனாவுக்கு வந்த போது பள்ளிவாசலின் படிக்கட்டுகளில் ஏழைகளோடு ஏழையாக உமர் உறங்கிக் கொண்டிருக்க கண்டார்."
(***Gibbon*** – தனது ***In The Decline and Fall of the Roman Empire*** என்ற நூலில்)
மகுடம் இல்லை. அரச மாளிகை இல்லை. காவலர்களோ ஏவலர்களோ இல்லை, குதிரை பூட்டிய சாரட் வண்டிகள் இல்லை. வெண்சாமரம் இல்லை. துதிபாடிகள் இல்லை. முரசு இல்லை, ஒற்றைச் சவுக்கை மட்டும் வைத்துக் கொண்டு அந்த ஏழை அரசாண்ட அழகை சொல்லி முடிக்க வார்த்தைகளே இல்லை.

# நெருப்பாக கொதித்த அரசுப்பணம்!

நபிகள் நாயகமும் சரி, அவருக்குப்பின் வந்த கலீஃபாக்களும் சரி, சொந்தத் தேவைக்காக அரசுப் பணத்தில் கை வைப்பது இஸ்லாமியச் சட்டத்திற்கு முரணானது என்பதால் அதில் மிக உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தனர். அதனால்தான் அரசுக்கருவூலம் நிரம்பி வழிந்தபோதும் சொந்த வாழ்வை வறுமையிலேயே கழித்தனர்.
உமர் என்ற பெயரைக்கொண்ட இன்னொரு கலீஃபாவை பிற்காலத்தில் சரித்திரம் கண்டது. அவர் தான் உமர் பின் அப்துல் அஜீஸ் என்பார். ஒரு சமயம் அவருக்குத் தனிப்பட்ட செலவுக்காக ஒரு திர்ஹம் தேவைப்பட்டது. தம் மனைவி ஃபாத்திமாவிடம் வந்து, "கைச்செலவுக்குப் பணம் வேண்டும். ஒரு திர்ஹம் இருந்தால் தா" என்று கேட்டார் கலீஃபா.
மனைவிக்குச் சிரிப்பதா அழுவதா என்று தெரியவில்லை. "இவ்வளவு பெரிய ஆட்சியாளராக இருந்தும் ஒரு திர்ஹம்கூட உங்களிடம் இல்லையே?" என்றார். கலீஃபா உமர் இப்னு அப்துல் அஜீஸ் அமைதியாகக் கூறினார்: "நரகத்தின் நெருப்பு விலங்குகளைவிட இந்த நிலைமை மேலானது." ஃபாத்திமா பொங்கி வந்த அழுகையை அடக்கிக்கொண்டார். இறையச்சத்துடனும் மறுமையில் பதில் சொல்ல வேண்டும் என்ற உணர்வுடனும் ஒரு நாடு ஆளப்பட்டால் இந்த உலகமே சுவனமாக மாறிவிடும் என்பதில் எந்த ஐயமும் இல்லை.

# சட்டங்களை வலுப்படுத்துவோம்

தனிநபர் ஒழுக்கம் இல்லாமைக்கு அடுத்த படியாக நாட்டில் குற்றங்கள் கட்டுக்கடங்காமல் போவதற்கான அடுத்த காரணம் நமது சட்டங்களின் வலுவின்மையே! சரி எது தவறு எது நன்மை எது தீமை எது நியாயம் எது அநியாயம் எது என்பதை தீர்மானிக்கும் வேலையை மனிதனே மேற்கொள்வதும்

குழப்பங்களுக்குக் காரணமாகிறது. அதன் காரணமாக பலமுறை சட்டங்களை மாற்றுவதும் சிலருடைய சுயநல தேவைகளுக்காக சட்டத்தை வளைப்பதும் நடக்கிறது. அதனால் நீதி, நியாயம் என்பவை கேலிக்குரியவை ஆகின்றன.

**யார் தீர்மானிப்பது?**

முதலில் இங்கு நன்மைகள் எவை தீமைகள் எவை அல்லது புண்ணியங்கள் எவை மற்றும் பாவங்கள் எவை என்பதை நாம் அனைவரும் அறியக் கடமைப்பட்டுள்ளோம். நம்மில் பலரும் பல மதங்களையும் கொள்கைகளையும் சார்ந்தவர்களாக உள்ளோம். ஒருவருக்குப் பாவமாகப்படுவது மற்றவர்களுக்குப் பாவமாகப் படுவதில்லை. அதுபோலவே ஒரு சாராருக்குப் புண்ணியமாகப் படுவது மற்றவர்களால் பாவமாகவோ அருவருக்கத்தக்க செயலாகவோ எண்ணப்படுகிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் நாம் பாவபுண்ணியங்களை எவ்வாறு தீர்மானிப்பது?

பெரும்பான்மைக்கு மதிப்பளித்து ஒரு செயலைப் பாவமாகவோ புண்ணியமாகவோ தீர்மானிக்க முடியுமா? அல்லது ஒரு சிலர் கூறுவது போல் மனசாட்சி கூறுவதே உண்மை என்று அதை ஏற்பதா? அல்லது நம் முன்னோர்கள் செய்ததே சரி என்ற அடிப்படையில் செயல்படுவதா? அல்லது நம்மிடையே உள்ள மதகுருமார்களும் சந்நியாசிகளும் மகான்களும் ஆன்மீகத் தலைவர்களும் சொல்வதே சரி என்று எடுத்துக்கொள்ள முடியுமா ? ***king is always right!*** -(அரசன் எப்போதும் சரியே!) என்று சொல்லப்படுவது போல் அரசியல் தலைவர்களும் ஆட்சியதிகாரம் படைத்தோரும் பலாத்காரம் செய்வோரும் செய்வதே சரி என்று எடுத்துக்கொள்வதா? அல்லது நமது இனத்தவர், நமது மொழியினர், நமது மாநிலத்தவர், நமது கட்சியினர், நமது மதத்தவர் செய்வதுதான் சரி என்று அவர்களைச் சார்ந்திருக்கலாமா?

**நன்மை தீமைகளைப் பிரித்தறிய தெளிவான அளவுகோல்**

இப்படி எந்த வழியில் நாம் நன்மை - தீமை அல்லது பாவம் - புண்ணியம் பற்றி ஆராய்ந்தாலும் நமக்கு மிஞ்சுவது குழப்பமே என்பதை உணரலாம். எனவே இந்த விடயத்தில் குழப்பமற்ற தெளிவான முடிவுக்கு வர ஒரே வழிமுறை இதுதான்:

யார் இவ்வுலகிற்கும் அதில் உள்ளவற்றிற்கும் சொந்தக்காரனோ அதிபதியோ அவன் எதை நமக்கு நன்மை என்றும் அல்லது நமக்குத் தீமை என்றும் சொல்கிறானோ அதுவே உண்மையிலும் உண்மை. அவன்தான் இப்பேரண்டம் அனைத்தையும் அவற்றில் உள்ள சிறிதும் பெரிதுமான அனைத்து படைப்பினங்களையும் படைத்து இயக்கிப் பரிபாலித்து வருபவன். அவன் மட்டுமே முக்காலத்தையும் உணர்ந்தவன் மறைவானவற்றையும் வெளிப்படையானவற்றையும் பற்றிய முழுமையான அறிவுள்ளவன். அவனது அறிவு அனைத்தையும் சூழ்ந்தது. மனிதனுக்கும் மனித குலத்துக்கும் மட்டுமல்ல மற்ற அனைத்துப் படைப்பினங்களுக்கும் எது நல்லது எது கெட்டது என்பதை மிக மிகப் பக்குவமாக அறிபவன் அந்த இறைவன் மட்டுமே. எனவே நம் பரிபாலகன் எவற்றை நமக்கு நல்லது என்று பரிந்துரை செய்கிறானோ அவற்றை ஏற்பதும் எவற்றை நமக்குத் தீமை என்று சொல்லி அவற்றை செயயாதே என்று சொல்லி நம்மைத் தடுக்கிறானோ அவற்றிலிருந்து தவிர்ந்து கொள்வதும்தான்

அறிவுடைமை.
அது மட்டுமல்ல, இந்தக் குறுகிய தற்காலிகமான வாழ்வு என்ற பரீட்சைக் களத்தில் அந்த இறைவன் எதைச் செய் என்று சொல்கிறானோ அதுவே புண்ணியம் என்பது. அவன் எதைச் செய்யாதே என்று தடுக்கிறானோ அதுவே பாவம் என்பது!
ஆக, அந்த இறைவனுக்கு மட்டுமே நமக்கு எது நல்லது எது கெட்டது என்ற முழுமையான அறிவு உள்ளது. அவனுக்கு மட்டுமே எது புண்ணியம் எது பாவம் என்று தீர்மானிக்கும் அதிகாரம் உள்ளது என்பதை ஏற்றுக்கொண்டு அதன்படி நம் வாழ்வை அமைத்துக் கொண்டால் இவ்வுலக வாழ்விலும் அமைதியைப் பெறலாம். மறுமை வாழ்விலும் அவன் நமக்குப் பரிசாக வழங்கும் சொர்க்கத்தை அடையலாம்.
எனவே நாடு இன்று சந்தித்துக் கொண்டிருக்கும் சட்ட சிக்கல்களில் இருந்தும் அமைதியின்மையில் இருந்தும் விடுபட வேண்டுமானால் அதற்கு ஒரே வழி இறைவனின் வழிகாட்டுதலின் அடிப்படையில் அளவுகோலை அமைத்துக் கொள்வதும் இறைவன் தரும் சட்டங்களை அமுல் படுத்துவதும் ஆகும்.

# இறை சட்டங்களால் என்ன பயன்?

இறைவனின் வேதம் மற்றும் அவனது தூதரின் முன்மாதிரி செயல்முறை விளக்கம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு இயற்றப்படுபவையே இறைசட்டங்கள். இஸ்லாமிய வழக்கில் இதற்கு ஷரீஅத் என்று வழங்கப்படும்.

**ஷரீஅத்தின் நோக்கம் என்ன?**

1. மனித வாழ்வில் நன்மைகளை - அதாவது மனித குலத்துக்கு தொன்று தொட்டு எவையெல்லாம் நன்மையானவையாக, நலம் பயப்பவையாக இருந்து வந்துள்ளதோ அந்த நன்மைகள், சிறப்புகள், வளங்கள், நலங்கள் எல்லாவற்றையும் - நிலை நிறுத்துவது
2. மனித வாழ்விலிருந்து தீமைகளை - அதாவது மனித குலத்துக்கு தொன்றுதொட்டு எவையெல்லாம் தீமையானவையாக, தீங்கிழைப்பவையாகக் இருந்து வந்துள்ளதோ அந்தத் தீமைகள், அவலங்கள், அழுக்குகள், கசடுகள் எல்லாவற்றையும் - அகற்றித் தூய்மைப்படுத்துவது.

ஷரீஅத் அளிக்கின்ற வரையறைகளும் சட்டங்களும் நமது தனிப்பட்ட வாழ்வையும், குடும்ப வாழ்வையும் வாழ்வின் எல்லாத் துறைகளையும் தழுவி இருக்கின்றன.
வணக்கங்கள், தனிநபர் நடத்தை, ஒழுக்கம், பழக்க வழக்கம், நடையுடை பாவனை, குடும்ப வாழ்வு, உண்ணுதல், பருகுதல், சமூகத் தொடர்புகள், பொருளாதார நடைமுறைகள், குடிமக்களின் உரிமைகள், நீதித்துறை, அரசியல் என எல்லாத் துறைகளுக்கும் நெறிமுறைகளை வகுத்துத் தருகிறது ஷரீஅத்.
ஷரீஅத் தொடாத வாழ்வியல் துறையே இல்லை எனலாம். ஒரு தூய்மையான வாழ்வுக்கான வரைபடத்தை அது நமக்குத் தருகிறது.
இன்று நம் நாட்டை அலைக்கழிக்கும் சட்டங்கள் மனிதர்களால்

இயற்றப்பட்டவையும் பலமுறை திருத்தப்பட்டவையும் ஆகும். ஆனால் இறைவன் வழங்கும் சட்டங்கள் தொலைநோக்குள்ளவையும் மனிதகுலத்தின் அனைத்து அங்கங்களுக்கு மட்டுமல்ல அனைத்துப் படைப்பினங்களுக்கும் பொருத்தமானவையும் ஆகும். அவை நுண்ணறிவாளனும் நீதிமானுமான இறைவனால் வழங்கப்படும் சட்டங்கள் ஆகும்.

**உதாரணமாக இறைசட்டங்கள் நடைமுறைக்கு வந்தால்....**

- சுரண்டலுக்கும் பதுக்கலுக்கும் இலஞ்சம் ஊழல் போன்றவற்றுக்கும் வாய்ப்பு அளிக்காத பொருளாதார திட்டங்கள் நடைமுறைக்கு வரும். நாட்டின் செல்வம் செல்வந்தர்களுக்கு இடையில் மட்டுமல்லாமல் அனைவரிடையேயும் புழங்கும் வண்ணம் பொருளாதாரம் சீரமைக்கப்படும்.
- செல்வந்தர்களிடம் நீதமான முறையில் ஜகாத்(ஏழைவரி) தவறாமல் வசூலிக்கப்படும். அது ஏழைகளைத் தேடிக் கண்டறிந்து அவர்களுக்கே விநியோகம் செய்யப்படும். இன்று நாட்டில் நிலவிலுள்ள 40% வருமான வரி விதிப்பின் விளைவாக உண்டாகும் கருப்புப்பணம், சுவிஸ் வங்கிகளில் பதுக்குதல் போன்றவை ஒழிந்து உள்நாட்டிலேயே அந்த பணம் புழங்க வழிவகை உண்டாகும். (செல்வந்தர்கள் இறைப் பொருத்தத்திற்காக தானாகவே முன்வந்து ஜகாத்தை வழங்குவார்கள் என்பது வேறு விஷயம்)
- வட்டியில்லா பொருளாதாரம் நடைமுறைக்கு வரும். வெற்றுப்பணம் குட்டிபோடுவதும் வங்கிகள் வெற்றுக்காகிதங்களை புழக்கத்தில் விட்டு லாபம் சம்பாதிப்பதும் நிற்கும். அதனால் பணத்துக்கு உண்மையான மதிப்பு உண்டாகி, பணவீக்கம், ஊக வாணிபம், மோசடிகள் ஒழிக்கப்படும். பணக்காரர்களை மேலும் பெரிய பணமுதலைகளாகவும் ஏழைகளை பரம ஏழைகளாகவும் மாற்றும் இன்றைய பொருளாதார அமைப்பு மாறி முனைவோர் அனைவருக்கும் தக்க வாய்ப்பளிக்கும் திட்டங்கள் அமுலுக்கு வரும்.

மேற்கூறப்பட்ட விடயங்கள் நடைமுறைக்கு வந்து விட்டாலே நாட்டின் வறுமை ஒழிந்து நாட்டின் பொருளாதாரம் சீரடைந்து விடும் என்பதை சிந்திப்போர் அறியலாம்.

- நிலச்சுவான்தார்கள் தமது சொத்துக்களை முடக்கியபடி இருக்க அனுமதிக்கப்படாது. ஒரு நிலம் மூன்றுவருடத்திற்கு மேல் "தரிசாக கிடக்க" அனுமதிக்காது. குத்தகை முறை தடை செய்யப்படும். அவ்வாறு இருக்குமாயின் அரசு அதனை உள்வாங்கி பிரித்துக் கொடுக்கும்.
- சமூக நீதி நிலைநிறுத்தப்பட்டு மதம், ஜாதி, மொழி, இடம் அடிப்படையிலான பாகுபாடுகள் இல்லாமல் மக்கள் எல்லாருக்கும் சமமான வேலை வாய்ப்பும், தொழில் மற்றும் வணிக வாய்ப்பும், கல்வி உரிமையும் வழங்கப்படும். சட்டங்கள் மூலம் குறிப்பிட்ட பிரிவினரின் நலன்களை மட்டும் உறுதிப்படுத்தும் நிலை மாறி மக்கள் எல்லாருக்கும் எல்லாவித உரிமைகளும் வாய்ப்புகளும் பாரபட்சமின்றி வழங்கப்படும்.
- சமூகத்தில் ஏழைகள், முதியவர்கள், தேவையுள்ளவர்கள், அனாதைகள்,

விதவைகள், நாதியற்றவர்கள் போன்ற நலிவுற்ற மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக பைத்துல்மால் - (அரசுக் கருவூலம்) அமைப்பு திறம்படச் செயல்படும். பஞ்சம், பட்டினி, இயற்க்கைச் சீற்றங்கள் போன்ற ஆபத்தான சூழலில் அனைத்து மாநிலங்களின் வளங்களும் உரிய முறையில் அதிகாரப்பூர்வமாக திருப்பப்படும்.

- பண்புள்ள குடிமக்களை உருவாக்க பயனுள்ள கல்வியும் ஆளுமையை வளர்க்கத் தேவையான பயிற்சிகளும் இளம் பருவத்தில் இருந்தே புகட்டப்படும். நன்மை - தீமை நியாயம் - அநியாயம் போன்றவை பற்றிய விழிப்புணர்வு கற்கும் கல்வியோடு இணைந்து ஊட்டப்படுவதால் மாணவர்கள் கற்கும் கல்வி ஆக்கபூர்வமான பணிகளுக்கு பயன்படும். அவை அழிவுகளுக்கு பயன்படாது.
- கற்பனை பாத்திரங்களின் பெயராலும் மதங்களின் பெயராலும் நாட்டுவளங்களும் அரசு இயந்திரங்களும் வீணடிக்கப்படுவதும் மக்கள் அச்சுறுத்தப்படுவதும் முடிவுக்கு வரும்.
- தொழிலாளர்கள், விவசாயிகள் போன்றோருக்கு உரிய கூலி முறையாக தாமதமின்றி கொடுக்கப்படும். பொதுவாக இதுபோன்ற மனித உரிமைகள் அனைத்தும் முறைப்படி பேணப்படும். வரம்பு மீறல்கள் உடனுக்குடன் விசாரிக்கப்பட்டு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.
- குடும்ப உறவுகளையும் அமைதியையும் சீர்கெடுக்கும் விபச்சாரம் மது போதைப்பொருட்கள், சூதாட்டம் போன்றவை தடை செய்யப்படும்.
- கொலை, கொள்ளை, கற்பழிப்பு போன்ற வன்குற்றங்களில் ஈடுபடுவோரை திருத்த முதற்கண் உரிய சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அதற்கப்பாலும் மீறுவோர் கடுமையான தண்டனைகளுக்கு ஆளாக்கப்படுவார்கள்.
- பெண் இனத்தைப் பாதுகாக்க அவர்களுடைய கல்வி பெறும் உரிமை, மணமகனைத் தேர்ந்தெடுக்கும் உரிமை, மணக்கொடை பெறும் உரிமை, சொத்துரிமை, போன்றவை சட்டரீதியாக வலுவாக்கப்படும். வரதட்சணை சட்டவிரோதமாகும்.
- சமூக அமைதிக்கு பங்கம் விளைவிக்கும் அவதூறு மற்றும் வதந்திகளைப் பரப்பும் மனிதர்களும் ஊடகங்களும் தங்கள் குற்றங்களுக்கான தண்டனைகளில் இருந்து தப்ப முடியாது. ஊர்ஜிதம் செய்யாமல் பரபரப்புக்காக பரப்பபடும் செய்திகளுக்கு பரப்பியவர்கள் மீது சட்டம் பாயும்.

இன்னும் இவை போன்ற பல புரட்சிகளும் அங்கு உடலெடுக்கும். ஷரீஅத் என்பது நீதி, நியாயம் மட்டுமல்ல அதை நடைமுறைப்படுத்தும் போது நாட்டின் செழிப்புக்கான வழிகள் அங்கு தானாகவே திறக்கின்றன. சட்டம் ஆளும் என்பதை விட மனித மனங்களின் ஒருமைப்பாடும் ஈடுபாடும் நாட்டு மக்களின் பொறுப்புணர்வும் அங்கு ஆட்சி செய்யும் என்பதே உண்மை!

# உத்தம அரசியல் புரட்சி!

சுருக்கமாக கூறுவதென்றால் இஸ்லாம் முன்வைக்கும் சீர்திருத்தங்கள் நடைமுறைக்கு வருமானால் கீழ்கண்டவை இங்கே நடைபெறும்....

● மனித இதயங்களில் இறைவனைப் பற்றியும் மறுமை வாழ்வு பற்றியும் முறையான நம்பிக்கை விதைக்கப் படுவதால் பாவங்கள் விலகும். மனிதனை சுயக்கட்டுப்பாடு மிக்கவனாக கடமை உணர்வு மிக்கவனாக அது வார்த்தெடுக்கும். அநீதியும், அக்கிரமங்களும் மோசடிகளும் அழிந்து அங்கே தர்மங்களும், நல்லறங்களும் நீதியும் நேர்மையும் பரஸ்பரம் விட்டுக்கொடுக்கும் பண்பும் நாட்டுவளங்களை நெறியோடு பங்கிட்டுக் கொள்ளும் மனப்பாங்கும் மக்களிடையே வளர்ந்து வரும்.

● மனித உள்ளங்களில் உண்மையான இறை உணர்வும் பக்தியும் மறுமை உணர்வும் விதைக்கப் படுவதாலும் அவனோடு நேரடித் தொடர்பு ஏற்படுவதாலும் தனிநபர் வாழ்வில் தன்னம்பிக்கை, சுயமரியாதை உணர்வு, வீரம், பாவங்களில் இருந்து விலகியிருத்தல், தியாகமனப்பான்மை, பொறுமை, பிற உயிர்களிடம் அன்பு, பணிவு போன்ற நற்பண்புகள் மக்களின் வாழ்வில் தழைக்கும்.

● கடவுளின் பெயரால் சுரண்டப்படுதலும் கொள்ளைகளும் மூடநம்பிக்கைகளும் மூடப்பழக்கவழக்கங்களும் வீண்சடங்குகளும் ஒழியும். பொருட்செலவின்றி நேரடியாக இறைவனை வழிபடுவார்கள். இந்த நிமிடம் வரையும் அயராமல் நடைபெறும் பகல் கொள்ளைகள் முடிவுக்கு வரும். தொடர்ந்து நாட்டில் செல்வ வளம் செழித்தோங்கும், ஆக்கபூர்வமான வழிகளில் நாட்டின் செல்வம் செலவிடப்படும்.

● ஒன்றே குலம் ஒருவனே இறைவன் என்ற கொள்கை மேலோங்க ஜாதிகளும் தீண்டாமையும் ஏற்றதாழ்வுகளும் இனவெறியும் நிறவெறியும் ஒழியும். இனத்துக்கு ஒரு நீதி, நாட்டுக்கு ஒரு நீதி மாநிலத்துக்கு ஒரு நீதி என்னும் நிலைமாறி அனைத்து மக்களுக்கும் ஒரே நீதி என்பது நடைமுறைக்கு வரும். மனித சமத்துவமும் சகோதரத்துவமும் சுயமரியாதையும் பரஸ்பர அன்பும் மலரும்.

●. பகுத்தறியும் பண்பு தூண்டப்படுவதால் அங்கு அறியாமை அகன்று மனிதகுலத்துக்கு பயனுள்ள கல்வியும் அறிவியலும் வளரும். இறையச்சத்துடன் இணைந்து கற்கப்படும் கல்வியும் அறிவியலும் மனித இனத்தை அழிக்கவோ அதன்மேல் ஆதிக்கம் செலுத்தவோ பயன்படுத்தப்பட மாட்டாது. மாறாக ஆக்கபூர்வமான வழிகளில் பயன்படுத்தப்படும்.

● பகைமைகளும் மோசடிகளும் அகன்று போவதால் பாதுகாப்பும் அமைதியும் சூழ ஒரு புத்துலகு பூத்து வரும். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற கோட்பாடு உண்மையாகப் பின்பற்றப்படும். நாடுகளைப் பிரித்து நிற்கும் எல்லைகள் மறையும், நாடுகளின் மூன்றில் ஒரு பங்கு பொருளாதாரத்தை விழுங்கி நிற்கும் இராணுவங்கள் மறையும்.

● இறை நேசத்துக்காகவும் மறுமை இன்பங்களுக்காகவும் வேண்டி எதையும் தியாகம் செய்யும் தன்னலமில்லாத சான்றோர்களால் அவ்வுலகு நிறைந்திருக்கும்!


Rs.10
பாரதம்
காப்போம்!
SAVE INDIA!
HOUSE OF PEACE
#8, 4th main, 2nd cross LB Sastri nagar
Bangalore 560017 Ph. 9886001357
Email: houseofpeaceblr@gmail.com